கண்ணன் அவதாரம்

(ஓலைச் சுவடியில் உள்ளபடி)



கண்ணன் அவதாரப் பாடல்களைத் திருவிழாக்களில் நமது முன்னோர்கள் ஆடிப் பாடிப் பரவியுள்ளனர்.
இந்தப் பாடல்களை நாமும் பாடியும் ஆடியும் கண்ணனை வழிபடுவோம்.

ஏடு எண் 25

கண்ணன் அவதாரம்



மலைமகள்[1] சகோதரனே, ஆதிமகாமூலம், மகுள[2] பாண்டி நாட்டானே,
உலகளந்த மாலே[3], விண்ணுலகை ஆளும் உம்பர் வணங்கும் பொருளே,
அஞ்சல் என்றோரைக் காத்தோன், அருமறைக்கும் எட்டா அச்சுதானந்த முகில்,
கஞ்சனுயிர்[4] கொல்ல வந்த கரிய முகில்மேனிக் கதையின் வரலாறு சொல்வேன்.
கண்டகனாம்[5] கஞ்சன் என்போன் வடமதுரை நாட்டைக் கதிறரசு[6] செய்யும் நாள்
வண்டர்களை[7] ஆதரித்து யோகிஸ்பரரை[8] வறுமைப்பட வதைத்தான்.

பாவத்துக்கு அஞ்சி, அங்கே பூமாதுதேவி பாரம் பொறுக்காமல்,

---

[1] மலைமகள் = மலையத்துவசன் மகள், பர்வதவர்த்தினி, பார்வதி தேவி.
[2] மகுளம் = கண்மாய் குளம் இவற்றின் அடியில் பலஆண்டுகாலமாகச் சிறுகச் சிறுகப் படிந்திருக்கம் களிமண். குமரிக்கோட்டைக் கடல்கோண்ட போது, கடலின் அடியிலிருந்து கடற்களிமண் பாண்டியநாடு முழுவதும் படிந்துள்ளது. இதன் காரணமாகப் பாண்டிய நாட்டை "மகுள பாண்டிநாடு" என்று பாடலாசிரியர் குறிப்பிடுகிறார். கண்ணனைப் பாண்டிய நாட்டான் (சந்திர வம்சத்தில் தோன்றியவன்) என்று குறிப்பிடுகிறார்.
[3] உலகளந்த மாலே = மூன்றடி மண் கேட்டு, ஓரடியால் உலகத்தை அளந்த திருமாலே.
[4] ***கஞ்சன்*** – ***கம்சன்*** என்ற பெயர் இந்த ஓலைச் சுவடியில் சுமார் 44 இடங்களில் கஞ்சன் என்றே எழுதப்பெற்றுள்ளது. எந்தவொரு இடத்திலும் கம்சன் என்று எழுதப்பெறவில்லை. நாலாயிர திவ்ய பிரபந்தத்திலும் கஞ்சன் என்ற சொல்லே பயன்படுத்தப்பெற்றுள்ளது. (இருட்டிற் பிறந்து போய் ஏழை வல் ஆயர் மருட்டைத் தவிர்ப்பித்து வன் கஞ்சன் மாளப் ..... நாலாயிர திவ்ய பிரபந்தம் பாடல் எண் 120)
[5] கண்டகன் = கொடியோன், கொடுங்கோலன், பாதகன்.
[6] கதிறரசு = கதிர் அரசு (கதிர் = கதிரவன், சூரியன்)
[7] வண்டர்களை = வலிமையானவர்களை
[8] யோகிஸ்பரரை = யோகிகளை

ஆபத்து வந்ததென்று, நிலமங்கை ஓடி அயனித்திடத்திலே[9] புலம்ப,



விண்ணோர் குலாம் நெருங்க வேதாவுஞ்[10] சென்று விரிகடலின்[11] ஓரம் நின்று,
கண்ணா, திருமார்பா, கரிய முகில்மேனி, காகுத்தா கார்த்தருள்வாய்,
என் செய்வோம் மாதவனே, நிலமங்கை அஞ்சி ஏங்குகிறாள் பாவமதால்,
முன் செய்த தீவினையோ, மூல முராரி, முகுந்தா என ஓலமிட[12]

ஏடு எண் 26



ஓலமிட கத்தியது திருப்பாற் கடலில் உறங்குகின்ற மாயவன் தன்
சாலம்[13] அதனால் அறிந்து, விண்ணிடை ஓர் வாக்குச் சத்தம் பிறந்திடவே,
பரமன் அது அறிந்து அண்டர் முனிவோர்க்கும் பேதையெனும் பூ மகளுக்கும்
திரமுடன் ஆகாசம் அதில்ச் சொன்னதோர் வாக்கைச் செப்புவான் நற்குணமாய்,
தேவர்கள் எல்லாம் மகிழ்வாய்ப் பூதலதிற்[14] சென்று செனிப்பார்[15] இடைக் குலமாய்,

---

[9] அயன் = பிரம்மா
[10] வேதாவும் = வேதங்களை ஓதும் பிரம்மாவும்
[11] விரிகடல் = பாற்கடல் (வங்காள விரிகுடா?)
[12] ஓலமிட = ஓலமிட்டு அழைக்க
[13] சாலம் = வித்தை (மாயாஜாலம் = மாயவித்தை)
[14] பூதலத்திற் = பூமியில்
[15] செனிப்பார் = ஜனிப்பார், பிறப்பார்

தாவி ஆய்ப்பாடி என்று அஞ்சுல[16] கூடிய வீதிதான் அமைத்து வாழ்ந்திடு நாள்,



மதிகுலத்தில்[17] வந்துதித்தோன் சத்தியம் வழுவாத வசுதேவ ராசனுக்கும்
பதிவிரதா தேவகிக்கும் வைகுந்தநாதன் பாலன் எனவே பிறந்து
கஞ்சனைக் கொன்று உங்கள் கவலைதனைத் தீர்ப்பார், காயாம்பு, மேக வண்ணர்,
அஞ்சாமல் நீங்கள் எல்லாம் வத்தாத[18] செல்வமதாய் அவனிதனில் ஏகும் என்று,
நிலமங்கைபாரம் அது இன்னும் சிலநாளில் நீங்குமென விண் அகன்றார்,
வலிமை பெற்ற அண்டர்[19] எல்லாம் ரம்பைகளோடே வந்து அமைந்தார் பாடி[20] நகர்.

ஏடு எண் 27



நீதி நெறி மாறாமல் ஆய்ப்பாடி நன்னகரம் நேர்த்தி பெறவே விளங்க
வாது புரி கஞ்சனுடன் கூடப் பிறந்த மாமயிலாள் தேவகிக்கும்

[16] அஞ்சுல = ஐந்து ல = ஐந்து லட்சம் (ஏடு எண் 45 பார்க்க)
[17] மதிகுலத்தில் = (மதி = சந்திரன்) சந்திரகுலத்தில், (பாண்டியர் சந்திரகுலத்தவர், சோழர் சூரியகுலத்தவர், சேரர் அஃனி குலத்தவர்), ஏடு எண் 25இல் “மகுள பாண்டி நாட்டானே” என்ற பாடல்வரிகளிலும் கண்ணன் “பாண்டியநாட்டான்” என்ற குறிப்பு உள்ளது.
[18] வத்தாத = வற்றாத, குறையாத
[19] அண்டர் = வானோர், தேவர்,
[20] பாடி = ஆயர்பாடி

சூது ஒன்று அரியாதான் வசுதேவ ராசனுக்கும் சுபசோபனம்[21] முடித்தார்.
வேதமுறைப்படியே சம்பிரமமாக[22] விபாகம்[23] அது முடித்து
பார் ஏற்றிடவே பதிமூன்றாம் நாளில் பட்டணப் பிரவேசம் என்று,
தேர் ஏற்றிக் கஞ்சன் என்போன் வடமதுரை[24] வீதிவலம் தேர் ஏறும் வேளையிலே,



[21] சுபசோபனம் = கல்யாணம்,
[22] சம்பிரமமாக = மிகவும் சிறப்பாக, ஜம்பமாக, அனைவருக்கும் தெரியும் வகையில் ஆடம்பரமாக,
[23] விபாகம் = விவாகம், திருமணம்
[24] வடமதுரை = மதுரா அல்லது வடமதுரை நகரமானது உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஆக்ராவிற்கு வடக்கே 50 கிமீ தொலைவில் உள்ளது. மதுராவிலிருந்து 11 கிமீ தொலைவில் பிருந்தாவனமும் 22 கிமீ தொலைவில் கோவர்தனமும் அமைந்துள்ளன.

“கொடியிடைப் பெண் தேவகியாள் எட்டாம் கர்பத்தால்க் கொலைகாரக் கஞ்சனுக்கு

மடிவு[25] வரும்” என்றே தான் ஆகாசவாணி[26]
வாக்கு உரைக்கக் கேட்டு அவனும்,
கண்கள் இண்டும் தீய்ப் பறக்கப் பல்லைக்
கடித்துக் கை வாளுரை விடுத்து
வன்கண்மையாகவுமே[27] கிட்ட நெருங்கி,
மாபாவி கஞ்சன் என்போன்
தங்கை தன்னை வெட்டவென்று வீரவாள்
ஓங்கித்தான் திரும்பும் வேளையிலே,
மங்கை மணவாளன் மிகுந்த புகழுடையோன்
வசுதேவராசன் அப்போ,

ஏண் எண் 28

பதறி எழுந்து, அங்கே மைத்துனன் கைபிடித்து,
பாவம் இதுவாகும் என்று
இதை அறியா வேந்தே முன்னிட்ட விதியன்றி
இடையில் நடப்பதுண்டோ,
பொல்லாக் கொலைகள் புரிகின்ற பாவியரும்
கொல்லார்கள் பெண்ணைக் கொடும் பழி
உண்டாம் எனவே,

[25] மடிவு = மடிதல், இறப்பு
[26] ஆகாசவாணி = ஆகாயத்திலிருந்து ஒலிக்கும் சொல், அசரீரி
[27] வன்கண்மை = வன்கொடுமை



இசை[28] ஒழிவதன்றி, இரவி மதி[29] உள்ள அளவும், வசை[30] ஒழிய மாட்டாதே மன்னா எனத் தடுத்தான்,
ஒன்றொடியாள் பெற்ற மக்கள் எத்தினை ஆனாலும் உன்னிடத்தில் நான் தாரேன்,
கொன்று[31] சரிப் பிடித்துப் பாவமெல்லாம் வாரிக் கோட்டை கட்டி வாழு மென்றான்.



நன்று என்று சம்மதித்து, நடக்கும் அதிசயங்கள் நாம் அறிவோம் என்றேதான்,
கன்றி[32] மனம் வேறாகி அரண்மனையிற் சென்று கலங்கி அவன் தானிருக்க,
கணவரொடு தேவகியும் அந்தரங்கம் பேசிக் கலவாமல்[33] ஞானிகள் போல்
குணமுடனே வெவ்வேராய் ஐந்து வருஷம் கூடாமலே இருக்க,
செந்திருமால் தான் அறிந்து இருபேருடைய சித்தம் தனில்ப் புகுந்து,
தந்திரமாய்க் கூட வைத்துக் கற்பந் தரித்து ஓர் தனையனைப் பெற்றாள் மணிபோல்,

ஏடு எண் 29
வாக்குத் தவறாதான் வசுதேவராசன் வந்து "மைந்தனைத் தா" என்றிடவே
தேக்கி இலைநீர் போல்த் ததும்பித் தேவகியம்மன் செல்வன்தனைக் கொடுக்க

---

[28] இசை = புகழ்
[29] இரவி மதி = ஞாயிறு திங்கள், சூரிய சந்திரர்
[30] வசை = வசவு, இகழ்ச்சி,
[31] கொன்று = கொலை செய்து
[32] கன்றி =மனம் புண்பட்டு, இயலாமை ஆகி, மனம் வெதும்பி, (உடம்பில் அடிபட்ட இடம் கன்றிப் போய் உள்ளது என்பர்)
[33] கலவாமல் = கலக்காமல், கூடாமல், ஒன்று சேராமல்



பாலகனைக் கையேந்திக் கஞ்சனிடஞ் சென்று பதறி நடுங்கி நின்றான்.
மூலம் அறியாத கஞ்சன் முதல்ப் பிள்ளையால் நமக்கோர் மோசம் வராதெனவே,
போ என்று அனுப்பிடவே, வசுதேவராசன் புந்தி மகிழ்வாய் நடக்க,
பாவம் எண்ணா நாரதனும் அரசனிடம் வந்து பாலனைக் கொல் என்று ஏக



அப்படியே நல்லதென்று, வசுதேவராசனுக்கு ஆள் அனுப்பிக் கூட்டி வந்து
கப்பினையாய்[34] ஆண் சிசுவை உயரே எறிந்து கைவாளை ஏந்தினனே,
குழந்தை இருதுண்டாக முகத் தரைந்து வேந்தன் கொம்பு பிளந்த மந்தியைப் போல்
இழந்தை[35] வசுதேவன் வந்து மனையாளைக் கூட்டி எப்போதும் போலிருந்தார்,
தாரார் புகழுடையோன் தேவகியைக் கூட்டிச் சதாகாலமும் பயின்ற
ஓராறு மக்களையும் பிறக்கப் பிறக்க உரிமை இல்லான் கொன்று விட்டான்

ஏடு எண் 30

[34] கப்பினை = கொடுத்த வாக்குறுதி, செய்து கொண்ட ஒப்பந்தம்,
[35] இழந்தை = இழந்ததை மறுபடியும் எய்தப் பெற்ற, முன்னிருந்த நிலையை மீண்டும் அடைந்த,

ஏழாங் கருவினிலே ஆதிசேடன் தங்கி இருப்பது அறிந்தே மாயன்
தாழாத் துற்குணவான் இரக்கமற்ற கஞ்சன் சதி செய்வான் என்று அறிந்து
நேயமுடன் மாயை யெனும் காளிகாதேவியை நிமிஷந்தனில்[36] அழைத்து
மாயமாய் ஓர் நொடியில் வடமதுரை சென்று வசுதேவன் தேவியுட[37]
கெற்பத்தைப் பெற்றெடுத்துத் தாங்கிய தாய்க்குக் கெடுதி ஒன்றும் வாராமல்,
செப்பமுள்ள ஆயர்பதி ரோகிணி[38] வயிற்றில்ச் செவ்வையுடனே ஒளித்து



வருவாய் என்றே அனுப்ப, மாயா சொரூபி வாய்வு உருக்கொண்டே பறந்து
திருசேர் வடமதுரை தேவகி தன் கருவைத் தெரியாமல்ப் பெற்றெடுத்து,

[36] நிமிஷந்தனில் = நிமிடத்தில்
[37] தேவியுட = தேவியுடைய, தேவகியுடைய
[38] ரோகிணி = வசுதேவரின் முதல் மனைவி

கதி பெருகும் பாடி[39] சென்று ரோகணியாள் கற்பக் கருவில் ஒளித்து வந்து,
ததிக்கு[40] உதவும் மாயனிடம் மாயையவள் கூறச் சாமி[41] அவளுக்கு ஏது சொல்வான்,
எட்டாவதாகவுமே தேவகியம்மன் இடத்தினில்ப் போய் யான் பிறப்பேன்,
மட்டாருங் கூந்தல் மின்னாள் அசோதை[42] வயிற்றில் மங்கை என நீ பிறப்பாய்,

ஏடு எண் 31



நடக்கும் பலவிதமாயப் 'போ' என்று அனுப்பி நாரணனார் தானிருக்க,
முடக்க முற்ற தேவகியாள் வெறு[43] வயிராய் நிற்க, மோசம் வந்து நேரும் என்று
தாதியரும் காவலரும் கஞ்சனிடம் ஓடிச் சஞ்சலமாய் வார்த்தைச் சொல்வார்
சேதம் வருமோ அறியோம், உன் தங்கை கற்பம் செகசாலமாய்[44] கையதாய்
நேத்திருந்த[45] கற்பம் அதை இன்றைக்குக் காணோம், நீதனே என்றிடவே,
சூஷ்த்திரம்[46] அறியா மூடன் அன்று முதலாகச் சோம்பி, வெகு துக்கமுற்று,



நிற்கும் பொழுதும், கஞ்சமகாராசன் நிலத்தில் நடக்கும் பொழுதும்,

---

[39] பாடி = ஆயர்பாடி
[40] ததி= சந்ததி உண்டு பண்ணத்தக்க, மரபுப்பெருக்கஞ் சார்ந்த, தங்கவைத்துக்கொள்ளும் ஆற்றல்
[41] சாமி = திருமால்
[42] அசோதை = யசோதை
[43] வெறு = வெறுமை, ஒன்றுமில்லாத
[44] செகசாலமாய் = ஜெகசாலம் = உலகத்திலேயே பெரிய வித்தையாய்
[45] நேத்திருந்த = நேற்று இருந்த
[46] சூஷ்த்திரம் = சூத்திரம்

பொற்குண்ட[47] மாமனையில் மனைவியர்களோடு போத[48] இருக்கும் பொழுதும்,
உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதும் ஒன்றை எண்ணும் பொழுதும், தங்கை பிள்ளை கொல்லும் என்று இதுவே நினைவாக,
மண்ணில் மாயோனை என்றும் கவலை பெரிதாகி, மன்னன் மறவாததினால்,
கண்ணிலே காண்பதெல்லாம் பொல்லாத கஞ்சன் கண்ணன் உருவாய்க் காண்பான்,
எட்டாவதாகவுமே வசுதேவன் நெஞ்சில் எம்பெருமாள் வந்தடைந்தார்

ஏடு எண் 32



நஷ்ட்டம் இல்லாச் சோதையிடம்[49] வடபத்திரகாளி நன்மையுடன் வந்தடைந்தாள்,
மற்று இணையில்லாத கிருஷ்ணன் வசுதேவராசன் மனத்தில் வந்து தோற்றியதால்,
சுத்த செம்பொன் மேனியுமாயப் பார்த்த பேர்கள் எல்லாம், சூரியனைப் போல் விளங்கி
தன் மனத்துக்குள்ளாக வசுதேவராசன் சார்ந்த பெருஞ்சோதிதனை
மன்னன் மனையாளிடத்தில் வைகுந்தமூர்த்தியை வைத்தான் மனத்தாலே,
கலைகள் பதினாறுடனே செகசோதியாகக் கலந்து எழுந்த சந்திரனை

இலகவே கீழ்த் திசையில், அந்தரம் அதாக ஏந்துகின்றவாரது போல்
தாங்கினாள் தேவகியும், ஒன்றிரண்டு மூன்று தழைத் திங்கள் பத்தாகி,
ஏங்கி அவள் நித்திரை செய்ய, மருத்துவப் பெண்கள் எல்லோருங் கண் துயில,



[47] பொற்குண்ட = பொன் கலச, தங்கத்தினால் ஆன கலசம் உடைய அரண்மனை
[48] போத = கலந்து, சேர்ந்து
[49] சோதையிடம் = யசோதையிடம்

ஆவணிமாதம் அமரபட்சத்து அஷ்டமியில் மேவும் ரோகணியாம் இடப[50] லக்கணத்தில்,
மூவுலகம் பெற்றவனை ஆதிகாலத்தில் முன்பு பெருமாயோனை தேவகியாள் பெற்றாள், செகம் எல்லாங் கொண்டாட,
வாசமுள்ள கேசவானர் எட்டாவதாக மைந்தன் எனவே பிறந்து,

ஏடு எண் 33



பாச பந்தமாய்க் கிடக்கக் கால் விலங்கு பூட்டிப் பயின்று அவர் அங்கே இருக்க,
சங்கு ஒரு கை, தெண்டு[51] ஒரு கை, சாரூப தேசிகன் சக்கராயுதம் ஒரு கை,
அங்கு ஒரு கை மீதினிலே ஆதி மகாமூலம் அலர் தாமரை துலங்க,
வாகான[52] பொன் மார்பில் வசுதேவர் மைந்தற்கு மலர்மங்கை[53] கூத்தாட,
பாகா[54] மழலைமொழி, பஞ்சவர் சகாயனுக்குப்[55] பவளவாய்[56] தேன் ஊற,
வாய்ந்த சிரசு[57] அதனில் வைகுண்டவாசனுக்கு மாமகுடந்தான் துலங்க,



ஏய்ந்த[58] ரத்னக் குண்டலங்கள் தேவகியாள் மைந்தர்க்கு எங்கும் பளபள என,

---

[50] இடப = ரிஷப,
[51] தெண்டு = தண்டு, தண்டம்
[52] வாகான = வாகு ஆன, அழகான, வசதியான
[53] மலர்மங்கை = தாமரையாள், மகாலெட்சுமி
[54] பாகா = பாகு, வடிசாறு, பாகாய் வடிதல்
[55] பஞ்சவர் சகாயன் = பஞ்சபாண்டவருக்கு சகாயமானவன், கிருஷ்ணன்
[56] பவளவாய் = பவளம்போன்று சிவந்த வாய்
[57] சிரசு = தலை
[58] ஏய்ந்த = பொருந்திய, தகுந்த, ஒத்த

கவுஸ்து[59] ஆபரணம் கார் நிற மாமேனியர்க்குக் கண்டம்[60] அதில் தான் சொலிக்க,
பவுத்தா[61] தொழுந் தோளில் பச்சை முகில் மேனியர்க்குப் பாங்கு வலையங்கள் மின்ன,
போத மணிமேகலைச்[62] செகசோதியாகப் பொன்னாடை மேல் துலங்க,
சீதரன் தன் பூ முடிமேல் துழப[63] மலர்மாலை திக்கு எங்குந்தான் மணக்க,
கருமேகந் தன்னில் ஒரு செங்கமலக்காடு கனிவாகப் பூத்தது போல்,

ஏடு எண் 34
திருமேனிதான் துலங்க வரத வெங்கடேசன் சென்மித்தார்[64] பூமியிலே,
மூவுருவும்[65] தான் அவனாய் அனந்தபத்மநாபன் முத்தொழிலுந் தான் நடத்த



தேவுருவாய் வீற்றிருக்கும் கண்ணபுரமாயன் சென்மித்த[66] காரணத்தை
கண்டாளே தேவகியும் கண்ணனுடைய காயாம்பு மேனிதனை,
சண்டாளன் என் தமையன்[67] விடிந்தவுடன் நம்மள்[68] தனையனைக்[69] கொல்வான் எனவே
வண்டாறும் பூங்குழலாள் முட்டிப் புலம்ப, வசுதேவர் வந்தணுகி,

---

[59] கவுஸ்து = கவுத்துவமணி
[60] கண்டம் = கழுத்து
[61] பவுத்தா = பௌத்தா, (தத்த² மந்தா பதா⁴னமூலபா⁴வதோயேவ அட்ட²காதீ³ஹி **பவுத்தா**, இதரே பன தன்னிஸ்ஸயேன ஜாதா, தேன பதா⁴னஸ்ஸேவ க³ஹணங். https://tipitaka.org/taml/cscd/vin01t1.tik1.xml)
[62] மணிமேகலை = இடையில் அணியும் ஆபரணம்.
[63] துழபம் = துளசி
[64] சென்மித்தார் = பிறந்தார்
[65] மூவுருவுந்தான் = மூன்று உருவங்களும் தான், பிரம்மா விஷ்ணு சிவன் என்ற மூன்று
[66] சென்மித்த = ஜென்மித்த, பிறந்த
[67] தமையன் = சகோதரன்
[68] நம்மள் = நம்முடைய
[69] தனையன் = மகன்



கண்டே அதிசயித்து வசுதேவராசன் கண்கொள்ளாக் காட்சியதாய்,
அன்று கண்டு மெய் மகிழ்ந்து, கோவிந்தநாதன் அடிமலரைப் போற்றி செய்து
நின்றார் இருபேரும், என்ன செய்வோம் என்று நெஞ்சம் எல்லாம் புண்ணாகி,
ஆக்கி உணரும் முன்னே ஆதிமகாமூலம் அன்னை தந்தைக்கு ஏது உரைப்பார்,
திக்கில் உள்ளோர் கொண்டாடும் செங்கண் நெடுமால் செம்பவள வாய் திறந்து
துதித்த தகப்பனுக்கு துளபமணி மார்பன் சொல்லுவார் இவ்வசனம்,

ஏடு எண் 35



மதிக்க என்னை ஈன்ற மாதாபிதா, நீங்கள் மனக்கவலை வையாமல்
ஆயப்பாடி[70] நன்னகரில் நந்தகோன் தேவி அசோதை ஒருபெண் பயின்றாள்[71]
சாய்ப்போல்[72] உறங்குகிறாள், அந்த அசோதை தன்னிடம் கொண்டு என்னை வைத்து,
அங்கிருக்கும் பெண்சிசுவை சீக்கிரத்தில் தூக்கி அய்யனே இங்கு வந்தால்,
தங்கி, அங்கே நான் வளர்ந்து, பொல்லாத கஞ்சனைத் தான் எதிர்த்துச் சங்கரித்து[73],
வந்தடைந்தோரைக் காத்து, பூமிதேவி தாங்கும் மாபாரமும் தீர்த்து,

---

[70] ஆயப்பாடி = ஆயர்பாடி
[71] பயின்றாள் = பெற்றாள்
[72] சாயப்போல் = சாய்ந்தவள் போல், அயர்ந்து,
[73] சங்கரித்து= சம்காரம் செய்து, கொலை செய்து



தந்தையே உங்களுக்கும் மேலாம் பதவி சாயூச்சியம்[74] தாறோம் என்றார்,
கேட்டே வசுதேவன் கைகால் பதறிக் கிட்ட நின்று, வாய் புதைத்து,
போட்ட விலங்குடனே ஆயர் வாழ்ப் பாடிக்குப் போய் வருவது எப்படி நான்,
ஆதி நாராயணனே, எமைக் காக்க வந்த அச்சுதா, பச்சை வண்ணா,
நீதியல்ல[75] இவ்வுகத்தில், நான்கு கரத்தில் இரண்டு கரம் நீக்கும் என்றார்,
சூது செய்ய வந்த கண்ணன் ஆயுதமும் கையும் துறுசா[76] ஒழித்து உரைப்பான்,

ஏடு எண் 36



சேதம் ஒன்றும் வாராது, இது முதலாய் உந்தன் சிந்தை கலங்காதே நீ,
காலில் இட்ட சேர் விலங்கு என்னைத் தொடவும் கழன்று விடும், வா எனவே,
ஆலிலை மேல்ப் பள்ளி கொள்வோன், வசுதேவராசனுக்கு அந்தரங்கந்தான்[77] உரைக்க,
பாலன்தனை எடுக்க, வசுதேவர் காலின் பரு[78] விலங்குந்தான் தெறிக்க,

---

[74] சாயூச்சியம் = சாயுச்சியம் = நேரடியாகவே இறைவனுடன் ஒன்றாகச் சேரும் நிலை, இறைநிலையை அடைதல், (நான்கு நிலைகள், 1. சாலோக்யம் = இறைவனைக் காணுதல், 2. சாரூப்யம் = இறையருள் பெருதல், 3. சாந்நித்யம் = இறைவன் அருகில் இருத்தல், 4. சாயுஜ்யம் = இறைத்தன்மை பெருதல்)

[75] நான்கு கரங்களுடன் (பார்க்க ஏடு எண் 33) தோன்றுவது இந்த உலகத்தின் நியதியல்ல, எனவே இரண்டு கரங்களை நீக்குங்கள் என்றார் வசுதேவர்.

[76] துறுசா = துருதுருப்பாக, வேகமாக

[77] அந்தரங்கம் = இரகசியம்

[78] பரு = பருத்த, பெரிய

கோவி[79] நடந்தான் இருட்டில் கோதண்டராமன் என்னுங் குழந்தைதனைக் கையேந்தி,
கோட்டைக் கதவும் திறக்க காவலர்கள் எல்லாம் கொடுஞ் சவம் போலே உறங்க,



வாட்டமில்லா லோகம் எல்லாஞ் சச்சிதானந்தன் வழங்கி விட்ட மாயகையினால்[80]
இருட்டுக் கருகருத்து ஏழுமுகில் கூடி இடைவிடாமல்ப் பரப்பி,
மருண்டு காலூன்றி, அப்போ சப்தமேகம்[81] சேர்ந்து மழை மாரியாய்ப் பொழிய,
சோதி முகக் கண்ணபிரான் கமலமுகம் போன்ற தோற்றம் வழி காட்டிடவும்,
ஆதிஷேடன் படங்கள் மாயாவுதாரனுக்கு ஆயிரமும் வெண்குடை போல்
மீதே, சிரசு அருகில் தலையாயிரம் உடையோன் விரித்து வர, அப்போது
ஏடு எண் 37



மாதவனைக் கையேந்தி வசுதேவராசன் வழியே வரும் போது
பாற்கடலை விட்டு இங்கு பசுந்துளப மார்பன் பார்தனில் வந்தாரெனவே
ஏற்க[82] யமுனை நதி மாயவனைக் காணுவள் போல் இருகரையும் பொங்கி வர,
வந்தான் என வரிந்து பொங்கும் யமுனை வழி விலகித்தான் கொடுக்க,
சிந்தாகுலந்[83] தீர்ந்து வசுதேவராசன் சென்றார் ஆயப்பாடியிலே,
ஆயப்பாடி நன்னகரம் தொகை விரித்துப் பார்க்கில் அஞ்சு லெட்சம் பொன் தெருவாம்,

---

[79] கோவி = பணியாள், ஏவலாள்
[80] மாயகையினால் = மாயத்தினால்
[81] சப்த = ஏழு
[82] ஏற்க = வரவேற்க
[83] சிந்தாகுலம் = துன்பம், துயரம்

போய்ப் பார்கும் போது, அங்கே மழைக்கால் இருளும் புகை மூடியே இருக்க,
சிந்தை மிகவே அழன்று[84] அசோதை உடைய வீடு தெரியாமல் நிற்பளவில்,



தந்தியை[85] முன் காத்தோன் வசுதேவராசனக்குச் சாற்றுவார் அந்தரங்கம்,
மருதமரம் நிற்குதுபார், அதுதான் அசோதை வளவு, நீ செல் எனவே
அருளும் படிக்கு, அங்கே வசுதேவராசன் அசோதை மனைக்குள்ப் புகுந்தான்,
பிறந்த பிள்ளை இன்னதென்று நந்தகோன் தேவி பிரசவத்தின் வேதனையால்,

ஏடு எண் 38
உறங்கும் பொழுது, அங்கே வசுதேவராசன் ஒருவருக்குந் தோற்றாமல்[86]



அரக்கர் கருவருத்தோன் கோதண்டராமனை அணைபாடை[87] மேல் கிடத்தி,
இரக்கமுடனே அழுது, ஆச்சியம்மை பெற்ற ஏந்திழையை தொட்டு எடுத்து,
நடப்பான் திரும்பிடுவான், மகன் முகத்தைப் பார்த்து நான் என்ன செய்வேன் என்பான்,
அடக்க, எம்பெருமான் விடிந்துவிடும் போமென்று அப்பன் தனக்கு உரைக்க,
பிரிய மனம் வாராமல்த், தன்னுயிரைத் தானே பிள்ளை இடத்தே நிறுத்தி,

[84] அழன்று = வருந்தி
[85] தந்தி = யானை, (தந்தியை முன் காத்தவன் = ஆதிமூலம் என்ற யானையைக் காத்தவன்)
[86] தோற்றாமல் = தெரியாமல்
[87] அணைபாடை = குழந்தை கீழே விழுந்துவிடாதபடிச் சுற்றிலும் தடுப்பு (அணை) உள்ள மரத்தொட்டில்



நெறி கலங்கி, ஓர் நிமிஷம் வடமதுரை சென்று நேரிளையாள் தன்னிடத்தில்
கன்னி தனைக் கொடுக்க, வசுதேவராசன் காலில் விலங்கிருக்க,
அன்ன நடை மின்னாள்[88] நந்தகோன் தேவி அருஞ் சோபமே[89] தெளிந்து,
மண்ணுண்ட மாயோன் அணையாழியிற் கிடக்க, மாது பார்த்தே மகிழ்ந்து,
தன்னுடைய செல்வன் என்று, வைகுந்த வாசன் தனை எடுத்துப் பால் கொடுத்தாள்,
தேன் வைத்த மாலையினான் வசுதேவராசன் சென்றிருக்கும் போதினிலே,

ஏடு எண் 39
தான் வைத்த பெண் மகவும் கூவாகூவா என்றுதாம் அலறி ஓலமிட,
பொழுது விடிந்தவுடன் கஞ்சனுட தூதர் பெண் பெற்றாள் தங்கை யென்றார்,
அழுது நின்ற தங்கையற்கு இரக்கம் இல்லாப் பாவி ஆளனுப்பிக் கூட்டி வந்து,



எண்ணா தெல்லாம் நினைந்து, பெண் சிசுவைக் கையில் ஏந்தியே தேவகியும்
கண்ணாலே காண்பது எப்போ, கட்டிக் கரும்பே, காரிகையே என்று அழுதாள்,
அண்ணா, உனது அருமைக் குமாரனுக்குப் பெண்ணாரமுதைப் பெருக்க மணமுடிப்பாய்,

[88] மின்னாள் = மின்னுபவள், (திருப்பூவணம் அருள்மிகு திருப்பூவணநாதர் கோயில் அம்மையின் பெயர் மின்னாள் ஆகும்)
[89] சோபம் = மூர்ச்சை, அயர்ச்சி, சோம்பல்



கொல்லாதே, பெண்பாவம், என்று புலம்பிக் கும்பிட்டாள், கெஞ்சி அவள்
பொல்லாத காலம் அதால்[90] தேவகியாள் தன்னைப் புண்படப் பேசிச் சினந்து,
குழந்தையைக் கையால்ப் பறித்துப், பழி தீர்ந்தது என்று கோபித்துக் கண் சிவந்து,
அழுந்து இரு கால் பிடித்து வன் பளிங்குப் பாறைதனில் அடிக்கின்றான் பெண் சிசுவை,
அடிக்கும் பொழுதினிலே வஞ்சன் புயத்தில் ஆங்காரத்தோடு உதைத்து,
துடிப்புடனே விண்ணில் நின்று வீரச்சடை குலுங்கச் சொர்ண மணி நின்றாட,

ஏடு எண் 40



வானிற் பிறையது போல் இரண்டு கடைவாய்[91] அதனிலே வக்கிர[92] தந்தம்[93] சோதி மின்ன,
மீனிற்[94] பொலிந்து எழுந்து செம்பவளக் காடனைய, வீர சடை பின்னலிட,
மார்பில் மணிப் பதைக்கம், ஆதிபராசக்திக்கு வார் காதில்க் கம்மல் மின்ன,
சார்பு பெருஞ் சூலம் அது, சங்கரனோடு ஆடி தடக்கரத்திலே விளங்க,
காலிற் சிலம்பு ஓசை ரணபத்திரகாளிக்குக் கலகல எனவே சொலிக்க,
பாலிற் சிறந்த மொழி கானகத்தில் வாழுகின்ற பைங்கிளிகளைப் பழிக்க,

---

[90] அதால் = ஆதலால், ஆகையால், ஆனபடியால்
[91] கடைவாய் = வாயில் உதடுகள் இரண்டும் சேரும் இடங்கள்.
[92] வக்கிர = பின்பக்கமாகத் திரும்பி, வளைந்த
[93] தந்தம் = யானைத் தந்தம் போன்ற கோரைப் பல்
[94] மீனிற் = மீனில் ? மீன இராசியில்? பாண்டியநாட்டில் ?



காளிவடிவாகி, அங்கு எனைப் பெற்றதேவி கஞ்சனைப் பார்த்து ஓதுகிறாள்,
நீள் பளிங்குப் பாறையின் மேல்ப் புத்தியில்லா மூடா நீ அடிக்கக் காரியம் ஏன்,
என்னை இந்தப் பாறையின் மேல்க் கால்வாரி ஓங்கி எதுக்காய் நீ அடித்தாய்,
உன்னை வந்து கொல்வதற்குப் பாலாளி[95] மாயன் உன் வளவிலே[96] பிறந்து,
ஒரு வழியிற் போய் வளர்வான், அடேபாவி, கஞ்சா உன்னை வந்து கொன்றிடுவான்,
வரு பழியைத் தேடுவது மாபாவி கஞ்சா மன்னவற்குத் தர்மம் இதோ.

ஏடு எண் 41



அந்தரங்கமாகவேதான் உன்னுயிரை வாங்க அண்ணல் வளருகிறார்,
மந்திரகுரு நாரணனார் எவ்விதமும் உன்னை மாய்ப்பான் என்றே மறைந்தாள்,
இது புதுமை என்று அவனும் எண்ணாது எண்ணி, ஏங்கி, மனம் புண்ணாகி,
சதி வரும் என்று எண்ணியவன், மைத்துனற்குந் தங்கைக்குந் தாழ் விலங்கை வெட்டிவிட்டு,
விதியை விலக்குதற்கு ஈரேழு உலகில் வேறே[97] மருந்தில்லை என்று,
மதிமோசம் வந்ததென்று அருகிலிருக்கும் மந்திரிமாருக்கு உரைக்க,

[95] பாலாளி = ஒருவரின் மறுபடிவம், தன்மாற்றுவடிவம், ஒருயிரும் ஈருடலுமாக இயங்கும் ஒருவர்,
[96] வளவு = வளாகம்
[97] வேறே = வேறேதும்



அந்தமுள்ள[98] மந்திரிமார் எல்லோருங் கூடி ஆலோசனை முடித்து,
இந்தவினை தீர்வதற்கு நம்முடையசீமை[99] இளங்குழந்தை அத்தனையும்
கொன்று[100] சரிப் பிடித்தால், வடமதுரை ஆளுங் கொற்றவா, தீரும் என்றார்,
நன்றெனவே மெய் மகிழ்ந்து அமைச்சர்களுக்கு எல்லாம் நல்வரிசை தான் ஈந்து,
அசுரரையும் பூதரையும் அங்கே அழைத்து, ஆதரவாய்ச் சேதி சொல்வான்,
திசை முழுதும் நீங்கள் சென்று ராச்சியத்தில்[101] உள்ள சிசுவை[102] எல்லாங் கொல்லும் என்றான்.

ஏடு எண் 42



அரசன் மொழிப்படியே வேசங்கள்[103] மாறி அவனி[104]யெங்கும் எங்கும் சென்றிடவே,
நிறை நிறையாய்ப் பார்ப்ப அளவில் ஆயப்பாடி தேடி நெஷ்டூரி[105] ஓர் பூதம்,
கொங்கைதனில்[106] நஞ்சு அடைத்து, அடங்காத பூதம் கோலமயில்ச் சாயலைப்போல்
தங்கமென மெய்துலங்க, தண்டை சிலம்பு சதங்கை கொஞ்சவே நடந்தாள்,

---

[98] அந்தம் = முடிவு
[99] நம்முடையசீமை = நம்முடைய நாடு
[100] கொன்று = கொலை செய்து
[101] ராச்சியத்தில் = ராஜ்யத்தில், தேசத்தில், நாட்டில்
[102] சிசு = பச்சிளங் குழந்தை
[103] வேசங்கள் = வேடங்கள், தோற்றம்
[104] அவனி = பூமி
[105] நெஷ்டூர் = நிஷ்டூரம் = கொடுமை (கொடுமையான பூதம் ஒன்று)
[106] கொங்கை = மார்பு

பாலன் பிறந்த செய்தி நந்தகோன் கேட்டுப் பாப்பார்க்கு[107] ஈய்ந்து,
சீலமுடனே தயிர் மோர் பால்க் குடங்கள் கொண்டு செல்கின்றான் கஞ்சனிடம்,



அரசனைக் கண்டே வணங்கி, வடமதுரை வீதிவழி ஆயர்கோன் தான் வருக,
தர்ம வசுதேவர் கண்டு, நந்தகோனே, "உமக்குத் தனையன்[108] உண்டே" சொல் எனவே,
ஆம் உங்கள் புண்ணியத்தால் மைந்தன் உண்டு என்று அன்பாய் மொழிந்திடவே,
தாமதமாய் நில்லாதே, பாடிக்கிப் போம்[109] என்று தன்மையுடனே இயம்ப,
நடக்கின்றான் வேகமுடன், வசுதேவர் சொன்ன நடப்பு என்ன காண்பம் என்று,
இடுக்கம் அது செய்ய எண்ணி முன் சென்ற பூதம் எங்கெங்கும் ஆராய்ந்து

ஏடு எண் 43



அன்று ஆழ் கடல்தனிலே தேவர்கள் போற்ற அவதரித்த லெட்சுமிபோல்,
சென்றாள் தெருமுழுதும், அங்கே ஒருவர் சிறுவர்களைக் காணாமல்,
பூதனையாள் வஞ்சகமாய் நஞ்சு ஊட்டிக் கொல்ல வென்று பூமானைத்[110] தேடிவர,
சோதை[111] நித்திரை செய்திருக்க, மாயா சொரூபன் தொட்டிலிலேதான் தூங்க,
மோசம் எண்ணி வந்திடும் பேய், அசோதை யுடைய முன் தலப்பில்[112]ப் போயிருந்து,

---

[107] பாப்பார் = பார்ப்பனர், அந்தணர்,
[108] தனையன் = மைந்தன், மகன்
[109] பாடிக்கம் போம் = ஆயர்பாடிக்குப் போ
[110] பூமான் = மன்னன், புருசன், இலக்குமியின் கணவன்
[111] சோதை = யசோதை
[112] தலப்பில் = தலைவாசலில்

கேசவனைத்தான் அழைத்தாள், தனக்கு வருகின்ற கெடுமதி கண்தோற்றாமல்,



ஆறாவமுதே, என் கண்ணே, கரும்பே, அரசே, பொன்னே, மணியே,
வாராய் என்றே அழைக்கத், தொட்டிலை விட்டு வந்தான் அவள் எதிரே,
கடும் பாம்பை மாலை என்று அறியாச் சிசுக்கள் கையால் எடுப்பது போல்,
சுடுந் தீயை வாரிப் புத்தியில்லா மூடர் துகிலில்[113] முடிவது போல்,
வந்த கண்ணன் தன்னை அவள் முன்னாளில்ச் செய்த மாதவத்தினால் எடுத்து,
பந்து ஸ்தனத்தைத்[114] திறந்து, விஷங் கலந்த பாலை பச்சை வண்ணற்கே கொடுத்தாள்.

ஏடு எண் 44
உலகு உயிர்க்கு எல்லாம் அமுர்தம்[115] ஊட்டுகின்ற நாதனுக்கு இலகுவடம் நீக்கி இருமுலைப் பாலூட்டினளே,



கும்ப முலையைத் திறந்து கார்மேக வண்ணனுக்குக் கொடுத்தாள் மடிக[116] என்று
செம்பவள வாயை வைத்து, வஞ்சகத்தை எண்ணி செந்திருமால் பால் குடித்தார்,
விடப்பால்[117] அமுது ஊட்ட, மாயாவுதாரன் மெள்ள மெள்ளவே சிரித்து,

---

[113] துகில் = துணி
[114] ஸ்தனத்தை = தனத்தை, முலையை
[115] அமுர்தம் = அமுதம், அமிழ்தம், அமுது
[116] மடிக = மடிந்துபோ, இறந்துபோ
[117] விடப்பாடல் = விஷப்பால், நஞ்சு கலந்த பால்

தடப்பால்[118] முலை முகையைக்[119] காயாம்பு மேனி தன் வாய்தனிலே வைத்து
குண்டலங்கள் ஆடக் கோவிந்த மூர்த்தி குறா[120] சிரிப்புக் கொண்டிருந்து,



மண்டலங்கள் மின்ன மாயாவுதாரன் வாயினால்ப் பேய் முலையை
கஞ்சமலர்க் கண்ணன் வைத்து நஞ்சமிர்தம்[121] உண்டு கடவாயில்[122] ஓட விட்டு,
கொஞ்சுங் கிளி மொழியாள் பூதனையாள் ஆவியைக் குடித்தார் திருநெடுமால்,
பஞ்சபூதம் ஒடுங்கிப், பதறி, வாய் விட்டு அலறிப் பாரமலை[123] போல் மடிந்தாள்.
வஞ்சகி பட்டே விழவே, வார் கொங்கை மீதில் மாயன் தவழ்ந்து ஏறி
கருமேகத் துண்டு அது போல்ப் பிணமலையின் மீதே களிந்து விளையாடினானே,

ஏடு எண் 45



அருமையுடன் அசோதை கண்டு, வயிற்றில் அறைந்து வந்து[124], ஆவலுடனே தூக்கி,
மூப்பு இளமை அன்றி இந்த மூவுலகம் தனியே காப்பவனைக், "காக்க" என தெய்வம் போற்றினளே,

---

[118] தட = தடுக்க முடியாத
[119] முகை = மொட்டு
[120] குறா = நன்கு, நல்லது, அழகு, மகிழ்ச்சி,
[121] நஞ்சமிர்தம் = நஞ்சு அமிர்தம்
[122] கடவாயில் = உதடுகள் ஒன்று சேரும் வாய்ப் பகுதி
[123] "வார்பொரும் பாரமலை தோற்ற முலைகொடு ....." - திருப்புகழ்
[124] வயிற்றில் அடித்துக் கொண்டு வந்து

மஞ்சள் நீராடி, அவள் திஷ்ட்டி கழித்து, மாளிகைக்குள் கொண்டு செல்ல,
அஞ்சுலெட்சம்[125] வீதியுள்ளோர் சகலரும் கூடிவந்து அய்யோ ஈது என்னவென்று
யோசனைக்கு உள்ளாக, அங்கேயுற்ற மரம் அத்தனையும் வீசிய வேர் அற்றிட, வீழ்ந்தவள் தன் பேருடலை[126]
பூதனை தன் பேருடலைச் செந்தணலை மூட்டிப் பொசுக்கல்[127] உற்றார் கட்டைகளால்,



நாதன் வாய் வைத்ததினால் நாற்காதம்[128] மட்டும் நற்களபம்[129] தான் மணக்க,
கண்டு அந்த ஆயரெல்லாம், நந்தகோன் நின்தன்[130] கண்மணியே தெய்வம் என்றார்,
கொண்டல் வண்ணமேனியினான் கஞ்சன் உயிர்க்கு ஓர் கூற்றுவன் போலே வளர்ந்தார்,
தாலாட்டி நஞ்சு ஊட்டிக் கொல்ல வந்த பூதனையாள் சாயூச்சியமே அடைந்தாள்,
பாலூட்டுவார் தமக்கு எந்தெந்த நாளும் பரமபதம் அரிதோ,
பூதனை போய் மாண்ட செய்தி கஞ்சனிடத்தில்ப் போய்ச் சொன்னார் தூதுவர்கள்,

[125] அஞ்சுலெட்சம் = ஐந்து இலட்சம்
[126] பேருடலை = பெரிய உடலை
[127] பொசுக்கல் = தீயிலிட்டு எரித்துச் சாம்பலாக்குதல்
[128] நாற்காதம் = நான்கு காதம், (காதம் = 12 கி.மீ., நான்கு காதம் = 48 கி.மீ.)
[129] களபம் = சாந்து
[130] நின்தன் = உன்தன்= உன்னுடைய

ஏடு எண்46

வாதி அவன்தான், எனவே மற்றொர் அவுனனை[131] வாயு எனப் போய்க் கொல்லு மென்றான்,



வாது வருது என்று அறிந்து மாதா மடியில் மலைபோல்க் கனங் கொடுத்தான்,
காதார் விழியணங்கு மைந்தனுடைய கனம் பொறுக்க மாட்டாமல்,
மைந்தனை முத்தத்தில் வைத்து அசோதை எழுந்து மாளிகைக்குள் போய்வருமுன்,

[131] அவுனன் = அரக்கன்

அந்தரத்தில் வந்த அவுணன்[132] கண்ணனைத் தூக்கி ஆகாசத்தே அகண்டான்,
வானவரைக் காத்த வள்ளல் ஆகாச மீதில் வல்லசுரனைப் பிடித்து,



கூனிக்குரல் நெரியக் கோவென்று அலறக் கோவலன் கையால் நெறித்தான்,
அவன் வீழ்ந்தான் கார்மலை போல், அந்த மலைமேல் அய்யன் விளையாடலுற்றான்,
கவனமுடன் பாடிதனில் எல்லோருங் கூடிவந்து, கண்ணன் தனைப் பார்த்து,
இதுவென்ன காலம் என்று நந்தகோபாலன் முதல் எல்லோரும் மெய் நடுங்கி,
பதியில் இறந்தே கிடந்த அவுணன் உடலைப் பருமரத்தால் சுட்டு விட்டார்,
பேடை அன்னம் போல் நடையாள் ரோகணியாள் ஈன்ற பலராமன் தான் வளர,

ஏடு எண் 47



சூடும் துழாய் முடியோன் வைகுண்டவாசன் சோதை மகனாகவுமே,
நந்தகோன் தன்மனையில் நரசிம்மமூர்த்தி சொந்த மகனாய் வளர்ந்து,
அந்தமுள்ள பாடியெங்கும் யார்க்கும் தோற்றாமல் அஞ்சனை[133] மைக்காரனைப்[134] போல்
வஞ்சகமாய்த் தான் ஒழித்து உரியில் வைத்த வெண்ணை யெல்லாம் வாரி மிகவே புசித்து,
தொஞ்ச பாலாடை முதல் ஆயப்பாடி தோறும் குஷ்த்திரமாய்[135] அள்ளி உண்பான்,
கட்டின கன்றைத் தெரித்துப் பசுவினிடம் விட்டுக் கண் சிமிட்டுவான் சிலரை,

---

[132] அவுணன் = அசுரன், தேவர்களின் பகைவன், இராக்கதன்
[133] அஞ்சனை = கண் இமை, (அனுமானின் தாய், ஒரு பெண்யானையின் பெயர்)
[134] மைக்காரன் = மை தயாரித்து மாந்திரிகம் செய்வோன்
[135] குஷ்தி = மற்போர், ஆயுதங்கள் இல்லாமல் உடலால் சண்டை யிடுதல்,

கற்கமுனி[136] பேரிட்டது



திட்டி வைது[137] கோவியர்கள் துரத்திவரும் போது தொட்டில்க் கிடந்தது அழுவான்,
அதுகண்டு ஆச்சியர்கள் அசோதையிடம் ஓடி அசந்து வருவார் சிலபேர்
மதிவண்ணன் தன்னுடனே கண்ணனையும் அன்பாய் வளர்த்தாள் அசோதை யம்மாள்
கற்கமுனி தன்னிடம் போய், வசுதேராசன் கைகட்டி வாய் புதைத்து,
மக்கள் வளர்பாடி சென்று பேர்நாமமிட்டு வரவேணும் சுவாமி என்றார்.
எழுந்தார் மகாமுனியும் ராகவன் வாழ்கின்ற இடையர் பதிபோய்ப் புகுந்தார்.

ஏடு எண் 48



குளிர்ந்த வசனம் உள்ளோன் நந்தகோன் வந்து கும்பிட்டு மெய் மகிழ்வாய்,
நாதனே, மெய்க் குருவே என்னுடைய செல்வர்க்கு நாமம் இட வேணும் என்றான்,
நீதியுடன் கற்கமுனி மூத்தவன்தன் நாமம் நித்திய பலராமன் என்றும்,
இளையோன் பேர் கண்ணன் என்றும் ஆதிகுருவும் இன்பமுடன் தான் அழைத்து
கிளை வாசுதேவனிடம் பேர்வைத்தேன் என்று கீதமுனி சென்றனனே,
கீர்த்தி கெட்ட கஞ்சன் அவன் கண்ணனைக் கொல்லக் கெடு எப்போ வாய்க்கும் என்று,

---

[136] கற்கமுனி = ?
[137] வைது = திட்டுதல், வசவு

சூஷ்த்திரத்தேர்[138] வண்டியதாய் வேறோர் அவுணனைச் சுருக்கினிலேதான் அனுப்ப[139]
அலைப் பாற்கடலானுக்கு அன்பாய் அசோதை அங்கே முலைப்பால் கொடுத்து, முகமலர்ந்து முத்தமிட்டு,



பொன்னின் மணியே, புவியில் விளையாட வந்த மின்னின் விளக்கே, விளங்கும் இளம் பிறையே,
சேலாட்டுங் கூர் விழியாள் கண்ணன் தனையும் சிந்தை மகிழ்ந்து இவ்வாறு
தாலாட்டக் கண் துயின்றான், தொட்டிலின் மீதே தாமோதரப் பெருமான்.
வடிவால் சோதையம்மாள் அருகே இருக்கமாத்தான் சகட்டு[140] உருவாய்

ஏடு எண் 49
திடுதிடு என வேகமதாய்க் கிட்டி வரக் கண்டு திருமால் அதை அறிந்து,
உதறி எழுபவன் போல் எட்டி மிதிக்க, உருண்டான் பருபதம் போல்,
பதறி வந்து ஆயர் நிற்க, அசோதை புலம்பப் பட்டணம் வாய்விட்டு அலர,



சுட்டு விட்டான் பட்டவனை என்ன செய்வோம் என்று சோர்ந்தர் அது குலத்தோர்
மட்டு அடங்காக் கண்ணனுக்கு முதுகு திரண்டு, மாதம் ஒருபத்து ஆக,
அள்ளி வெண்ணை உண்ட கண்ணன் தொண்டர் கலி தீர்க்கும் அரிகேசவ முகுந்தன்.

---

[138] சூஷ்த்திரத்தேர் = சகடைத்தேர்
[139] சகடன் என்ற அசுரனைச் சகடை என்ற தேர் வடிவில் விரைந்து அனுப்பினான்
[140] சகட்டு = சகடை (ஒருவகைத் தேர்)



மெள்ள மெள்ளவே தவழ்ந்து, சிசுக்களுடன் கூடி விளையாடி மண்ணை உண்டான்,
மாது ஒருத்தி ஓடி வந்து, அசோதை உன்பிள்ளை மண்ணை அள்ளித் திண்ணுது என்றாள்,
சேதி சொல்ல, மெய் சோர்ந்து, நான் ஏது செய்வேன், தெய்வமே என்று உருகி,
வெண்ணை உண்டான் என்று சொல்ல வளரட்டும் என்று விளையாட்டென மகிழ்ந்தாள்,
மண்ணை உண்டான் என்றவுடன், இறந்துவிடும் என்று வயற்றில் அடித்து அலறி,
வேர்த்து அங்கு எழுந்து ஓடிச் செங்கமலக் கண்ணனை வீதி எங்கும் தேடியவள்,

ஏடு எண் 50



சேர்த்துப் பிடித்து அவளும், வெண்ணை உண்டோன் வந்த செயலை அறியாமல்
ஏண்டா நீ மண்ணை உண்டாய், உண்பதற்கு அன்னம் இல்லையோ, என்று சொல்லி
ஆண்டவனார் தன் வாயை அகங்கையால் பற்றி, யசோதை அரவனைத்து
வாயைத் திற பார்ப்போம் என்று வைகுந்த வாசகனைத் தாயார் கையால் ஓங்க,
பேய் முலைப் பாலுண்ட கண்ணன் வாயைத் திறக்கப் பேருலகு[141] எல்லாம் தெரிய,
அண்டம் புவனம் முதல், சந்திர சூரியர்கள் அன்னையும் தானங்கு நிற்க,



கண்டாள் நடுங்க முற்றாள், இது புதுமை என்று கண்ணிரண்டு மூடி அவள்,

[141] பேருலகு = பெரிய உலகங்கள்

சித்தங் கலங்கி அன்னை, நமைக் காக்க வந்த தெய்வம் இதுவாம் எனவே,
வைத்து வளர்த்து வந்தாள், காயாம்பு வண்ணனுக்கு வயதுமொரு ஒன்றாக,
கரந்தபால் எல்லாம் ஒரு நாள் அசோதை கனல் அடுப்பின் மீது வைத்து,
சிறந்த வளைப்பூண் ஆடச், செந்தாமரை போன்ற திங்கள் முகம் வேர்வை சிந்த,
வயிர மணித்தோடு ஆட, வால்வளைகள் ஓலமிட, தயிர் கடைந்தாள் அன்னை, தனையன் முலை உண்டனனே.

ஏடு எண் 51



சாயல் மயில் போலே ஆச்சி யசோதை தயிர்கடையும் வேகமதால்,
தோயுந் தயிரில் இருந்து கண்ணனுடய மேனி எங்கும் துளியானது தெரித்து,
பிள்ளை எனப் பால் குடிக்கும் பேரழகன் தன் முகத்தில் வெள்ளை நிறப் புள்ளியங்கே, காயாம்பு மேனியர்க்கு மிகுந்ததோர் அலகிடவே,
வள்ளல் முலைப்பால் அருந்த, விளையாட, அசோதை வாகாயத் தயிர் கடைய,
பொங்கியது பால், எனவே நந்தகோன் தேவி பொட்டெனவே தான் எழுந்து,
கொங்கையினிற் பாலும், கருமேகம் போன்ற குழலில் மலர்த் தேனும்,

சிந்தை விரைந்து ஓட, அங்கு மாயா சொரூபன், சிறந்த தயிர்த் தாழிதனை,
விந்தை பெற எம்பெருமான் ஒற்றை விரலால் விரசாய்த்[142] தெரித்து உடைத்து,



அந்த மிகு தாழிதனில், மகனுக்கு அஞ்சி அவள் மறைத்த வெண்ணை எல்லாம்,
முந்தி வதைத்தான் வாரி வீதி வழியே முகுந்தன் விரைந் தோடினனே,
வேதம் தொடர்ந்து எட்டாத வேதவேதாந்தன் மெய்யன் தனைப் பிடிக்க,
பாதமலர்தான் சிவக்க விடுவேனோ என்று அந்தப் பாவையும் பின்னோடினளே.

[142] விரசாய் = விரைவாக

ஏடு எண் 52

கண்ணன் உரலில்க் கட்டுப் படுதல்

வில்லிடா மேகம்[143] எனக் காரிருளைப் போல விசைந்த கருங்குழலாள்,
நில்லடா நில்லு நில்லு விடுவேனோ வென்று நெருங்கி மெய் வேர்த்து நின்றாள்,
கண்டான் திரும்பி எங்கோன் நம்மை வளர்த்தாள் களைத்து வீழ்வாள் எனவே,
வண்டாந்த மேனியினான் ஆச்சியுடைய மலர்க் கரத்திற்ச் சிக்கி நின்றான்.



நின்ற மகனைப் பிடித்து, நீள் மனை சென்றேகி, நெருநெரு எனப் பற்கடித்து,
கன்றனையும் தாம்பாலே[144] கரியமுகில் மேனியனைக் கட்டினாள் அசோதை யம்மாள்

பாசவினைக் கட்டை எல்லாம் பக்தர்க்கு இரங்கிப் பாங்கா அறுத்திடுவோன்,
நேசமுடன் தாய் பிணிக்க[145] கட்டட்டும் என்று நின்றான் மனமகிழந்து,
கட்டுவென்று கொண்டு வந்த அசோதை தன் வீட்டுக் கயர்[146] எல்லாம் பத்தாமல்[147]



எட்டுவிரல் நீளம் முடியப் பத்தாமல் ஏந்திழையும் நின்று உருக,
அறிவை இனிக் கட்டுதற்கு யோசனை வேறாகி அளப்பரிந்து நிற்கையில்,

---

[143] வில்லிடா மேகம் = வானவில் இல்லாத மேகம்.
[144] தாம்பாலே = கன்றுகளைக் கட்டிப்போடும் தாம்புக் கயிற்றாலே
[145] பிணிக்க = பிணைக்க
[146] கயர் = கயிறு, கயறு (கயர் என்ற சொல் அப்படியே ஆங்கிலத்தில் 'coir' என்ற சொல்லாக ஆக்கப் பெற்றுள்ளது.)
[147] பத்தாமல் = போதாமல்

மருதமரம் நிற்குகின்ற[148] சாபமது விலக்க மாயோன் கிருபை வைத்து,

ஏடு எண் 53



கன்னி கை கட்டும் அந்தக் கட்டுக்கு உள்ளாகி நிற்க உன்னி[149] மகன் தன் இடுப்பில் பிணைத்து உரலோடு கட்டி வைத்தாள்,
திரிகினான் வேர் பரிந்து மரம் அலறி வீழ்கச், செயஞ் சோ குபேரன் மக்கள்[150]
பெருஞ் சாபந்தான் நீங்கி அய்யன் அருளால்ப் பிழைத்தோம் என மகிழ்ந்து,
உருமாறியே வணங்கி அய்யனருள் பெற்ற கல்உரலோடு இவன் தவழ,
பாடியில் உள்ளோர்கள் வந்து கொல்லைதனில்[151] நின்ற பருமரத்தைக் காணாமல்,
வாடினார் மெய் தழன்றார், நந்தகோன் வந்து மனையாளை வைது உருக்கி[152]



மகனை அவிழ்த்து விட்டுப், பசுக் கிடைக்கிச் செல்ல மாயன் விளையாடினனே,
செகம் ஏழும் உண்ட கண்ணன் மூன்று வயதில்ச் செகசாலஞ் செய்யவென்று,
ஆவிளங் கன்றோட்டி அய்யன் தன்னைப் போலொற்ற[153] ஆயர் சிறுமக்களுடன்

---

[148] நிற்குகின்ற = நிற்கின்ற

[149] உன்னி = ஊன்றிய கவனத்துடன், விழிப்போடு, உன்னிப்பாக.

[150] குபேரன் மக்கள் = செயம்(ஜெயம்), சோ என்ற இருவரும் குபேரனின் பிள்ளைகள். இவர்கள் பெற்ற சாபத்தால் மருத மரங்களாக மாறி யிருந்தனர். கண்ணனால் சாப விமோசனம் பெற்றனர். The Mahabharata calls his wife Riddhi ("prosperity") and Nalakubara his son.

[151] கொல்லை = வீட்டின் பின்புறம், புழைக்கடை, கொல்லைப்புறம்

[152] உருக்கி = திட்டி அழவைத்து, உருக்குலைத்து

[153] போலொற்ற = போல் ஒத்த

காவனங்கள்[154] ஊடு சென்று[155], சங்கு சக்கிராயுதக் கடவுள் அங்கே மேய்த்து வந்தார்.
காராயில்[156] ஆயிரமாம், காரிப் பசுக்கள், கபிலைக்[157] கன்று ஆயிரமாம்,
ஈராயிரம் செவலை, கார்மேக வண்ணற்கு எண்ணூறு போர் கருப்பாம்

ஏடு எண் 54

கண்ணன் கன்***று மேய்த்ததும் விளாங்கனி எறிந்ததும்***



வெத்தி[158] சேர் திண்டியமும்[159], வேதாவை ஈன்றோர்க்கு வில்லைச் சிறு செருப்பும்,
மத்திக் காமத் தொங்கல், கால்ச் சதங்கை, தண்டை, மணிமார்பில் பொற்பதைக்கம்,
தாயகட்டும் கோவணமும், வேய்ங்குழல்[160] கக்கம்[161], சவுக்கம்[162] ஒன்று தோள்ப் போட்டு
ஆயர் சிறாமக்களுடன்[163] மாயா வினோதன் ஆரணியத்துள்ப்[164] புகுந்து,
நாலு திக்கும் கன்றோட்டி நந்தகோன் சொந்தமகன் நாள் தோறும் மேய்க்கையிலே
மால்தனையே கொல்லவென்று பொல்லாத கஞ்சன் வரவிட்ட போர் அவுணன்

---

[154] காவனம் = கதிரன் ஒளி நுழையமுடியாதபடி அடர்ந்த வனம்(காடு). கார் ஒத்து ஏய் நிறத்த ஓதி காவனத்தின் நீழற்கே தருக்கி விளையாடி - திருப்புகழ்:482/2., வீட்டில் போடப்படும் பந்தலுக்கும் (கொட்டகைக்கும்) காவனம் என்று பெயர்.
[155] ஊடு சென்று = ஊடே சென்று, ஊடுருவிச் சென்று
[156] காராயில் = காராம் பசுவில்
[157] கபிலை = காராம்பசு, கபிலையொடு குடநாட் டோரூ ரீத்து (பதிற்றுப். 60, பதி.)
[158] வெத்தி = வெற்றி
[159] திண்டியம் = கதாயுதம், திருமால் கையில் இருக்கும் ஆயுதம்
[160] வேய்ங்குழல் = புல்லாங்குழல்
[161] கக்கம் = அக்குள், கைக்குழி, கம்புக்கூடு,
[162] சவுக்கம் = தோளில் போட்டுக் கொள்ளும் போர்வை அல்லது பெரிய துண்டு
[163] சிறாமக்கள் = சிறுவர்கள்
[164] ஆரண்யம் = காடு



கன்றொடு கன்றாகி உருக் கொண்டு வந்துமாத்தான்[165] கதறி ஊடாலே வர,
அன்றாவின்[166] மேல் துயின்றோன் கருணைக் கண்ணாலே அறிந்தான் பகைஞன் என்றே
விட்டுப் பிரியாத தமையன் பலராமன் தன்னை வேடிக்கை பாரும் என்று,
மட்டடங்காத் தோழர்களை அருகில் அழைத்து மதத்த சிங்கக் குட்டியைப் போல்,
கூட்டிவரும் நேரமதில்க், கஞ்சன் வரவிட்ட குடிகேடனா ஓர் அவுணன்
காட்டு விளாங்கனியாய்த் தொங்குகின்ற நாட்டத்தைக் கண்டு, நல்லவேளை என்று,

ஏடு எண் 55



கொல்ல வருங் கன்றதனைக் கால் நாலும் வாரிக் கூட்டி வலக்கைப் பிடித்து,
வெல்லவென்று வந்து, தொங்கும் விளாங்கனியும் கன்றும் விரசில்[167] மடியவென்று,
நின்றே கன்றால் எறிய[168], ஆகாச வீதியில் இரத்த ஆறாகி அங்கே,
மன்றில் விழுந்தே இறந்தார் பொல்லாத கஞ்சன் வரவிட்ட போர் அவுணர்,
பாலர்கள் கண்டே நடுங்க அச்சுதானந்தன் பதறாதீர்[169] என்று உரைப்பான்,
சாலமுள்ள கஞ்சனவன் எந்தனைக் கொல்லத்தான் அனுப்பினான் இவரை,

கன்றின் வடிவாகி வந்தார், அவரை நான் கொன்றேன், கலகம் வரும் பின்னாலே,
இன்று முதல் எப்பொழுதும் இந்த வனத்தில் இடர் வரும் அஞ்சாது இருங்கள்,

---

[165] வந்துமாத்தான் = வந்துமாகத்தான், வந்தும் ஆகத்தான்,
[166] அன்றாவின் = பாம்பு ?
[167] விரசில் = விரைவில்
[168] கன்றால் எறிய = கல்லால் எறிவது போன்று கன்றைப் பிடித்து விளாங்கனியை நோக்கி எறிய.
[169] பதறாதீர் = பதட்டம் அடையாதீர்



உள்ள தமர் தாதை[170] அன்னை யாவருக்கும் சொன்னால் உங்கள் உயிர்தான் மடியும்,
அத்தனைபேர் தோழர்களும் பிரமாணம் சொல்லி ஆயர்பதி வந்தடைந்தார்,
அன்னையர்கள் தன்னிடம் போய்க் கண்ணனுக்கு அஞ்சி யாதொன்றும் சொல்லாமல்
வண்ண முலைப்பால் அருந்தி அன்னங்களுண்டு[171] மறுநாள் வனத்தில் வந்தார்.

ஏடு எண் 56

கொக்கு உருக் கொண்டோன்



குருந்த[172] நிழல் தனிலே, பாலருடன் கூடிக் கோவிந்தன் அங்கு அமர்ந்து,
இருந்து அங்கு இளைப்பாறக் கஞ்சன் எனும் வஞ்சன் ஏவியதோர் வல்லசுரன்
கொக்கு உருவாய் ஓடி வந்து நடுவே இருந்த கோபாலனை விழுங்க,
அக்கினி போல்ச் சுட்டிடவே, கொக்குருவாய் வந்த அவுணனும் மெய்தான் பதறி
தீயாம் என்றே உமிழ்ந்து, மீண்டும் அவன் கொத்தத், திருகி அவனைப் பிடித்து
வாயைக் கிழித்திடவே, கொக்கு உருவாய் வந்தோன் மாண்டான் மலைபோலே.



[170] தாதை = தந்தை
[171] அன்னம் = சோறு, உணவு
[172] குருந்த = குருந்த மரம்

பாலாளி மாயவன் தன் கையால்க் கிழிக்கப் பரமபதமே சேர்ந்தான்.
மாலே உனைத் துதித்தேன், என் உயிரை நீக்கி மலரடித் தந்தே காப்பாய்,
வருந்த வரங் கொடுப்போன், சிறுவருடனே மறுவனத்தில் அக்கன்று ஓட்டி
பொருந்தி அங்கே மேய்த்து நிற்க, கஞ்சனுட தூதன் பொல்லாச் சினமுடையோன்,
கழுதையைப் போல் வேசமுற்று வனத்தில் வருக, காற்கோடன் போல் ஒருவன்,
பழுதில்லா நற்பனை[173] போல்க் கண்ணனைக் கொல்லப் பழமும் காயொடு நின்றான்.

ஏடு எண் 57



அறிந்தான் சோதைமகன், கேசரியை[174] வாரி அண்டங் கிடுகிடு என,
எறிந்தான் பனம் பழத்தை, இருபேரும் வீழ்ந்து இறந்தார் மலைகளைப் போல்.
பாலர் அதிசெயித்தார், அஞ்சிப் பயந்து பச்சை மாலைத் துதித்தார்,
வேளைதனிலே துயில்வோன் மூன்று முடிந்து விளங்கும் நாலாம் வயதில்,
கண்ணனுட மாயகை அதனைப் பிரம்மாவும் அப்போ[175] கண்டறிந்து பார்ப்போம் என்று
எண்ணமுடனே சிலநாள்ச் சோருவது பார்த்து அங்கு இருங்குந் தருணம் அங்கே



பிர்மா கன்று கவர்தல்

கங்கையில் வந்தே ஒருநாள் தோழர் எல்லாங் கூடிக் கட்டமுது[176] தான் அவிழ்த்து

---

[173] பனை = பனைமரம்
[174] கேசரி = சிங்கம் (முன்னுள்ள பாடலில் கழுதை குறிப்பிடப் படுகிறது, எனவே இங்கே கேசரி என்பது முன்பு சொன்ன கழுதையைக் குறிக்கிறது)
[175] அப்போ = அப்படியானால்
[176] கட்டமுது = கட்டுச் சோறு

மங்களமாய்ச் சாதம் உண்ண, அசோதை மகனுடைய வட்டம் திருப்பும் என்றார்,
கைவிரலின் மீதினிலே காயாம்பு வண்ணன் கறிவர்க்கமும்[177] தாங்கி,
தெய்வமென வந்து முகில் தேவாதி மூலம் தீங்குழலும் கக்கம்[178] வைத்து
கைக் கவளத்தோடு[179] எழுந்தார், மலை யெங்கும் சென்று கன்றினத்தை மீள்க்க[180] என்று,
தக்க புகழ் நான்முகனும் கன்று முழுவதையுந்தான் மறைத்தான் மாயமதாய்,

ஏடு எண் 58



ஓடினார் செந்திருமால் கானகங்கள் தோறும், ஓரிடத்தும் காணாமல்,
தேடித் திரும்பு முன்னே பிர்மாவும் அங்கே சிறுவரையும் கொண்டு சென்றான்.
வாடி நின்றான் கண்ணன் அங்கே, அருள்க் கண் உகந்து மந்திர தியானம் அதால்,
நாடினான் செந்திருமால், இச்செய்கை எல்லாம் நான்முகன் செய்த சூது எனவே,
நின்று மனம் தெளிந்து, விஷத்து வென்ற ஞானம் நினைவு உகந்து, அவ்வனத்தே
கன்றுகளும் தான் ஆனார், எத்தனைபேர் ஆயர் கண்மணிகள் தான் ஆனார்.



நிறங்கள், வயது, மச்சம், அந்தந்தப் பாலர் நேர்மைகளும், நற்குணமும்,
மருங்கில் இடும் கட்டுவர்க்கம், அவரவர்க்கு இட்ட வச்சிரப் பணி துலங்க,
கரங்களிலே தாய் கொடுத்துக் கன்றுகள் மேய்க்கக் கொணர்ந்த கம்புகளும் அப்படியே,
தரங்கத்தில்ப் பள்ளிகொண்டோன் எல்லா உருவும் தானாகி, ஓர் நொடியில்,

---

[177] கறிவர்க்கம் = கறி வகைகள்
[178] கக்கம் = அக்குள், கம்புக்கூடு, கை இடுக்கு
[179] கவளம் = ஒரு கைப்பிடி அளவுள்ள சோறு,
[180] மீள்க்க = மீட்க

வாலைச் சிறுவருடன் வைகுந்தவாசன் வண்ண லெட்சம் கன்று ஓட்டி,
மாலைப் பொழுதினிலே எப்போதும் போலே வந்தார் ஆயப்பாடிதனில்.

ஏடு எண் 59



கண்ணனைப் பகையாமல், ஆவினங்கள் எல்லாம் கதறி நின்று பால் கொடுக்க,
எண்ண ஒன்னாப்[181] பாலர்களுக்கும் ஆச்சி அம்மைமார்கள் ஏந்தி அமுது ஊட்டி வர,
செப்படி வித்தைக்காரன் மாயா சொரூபன் சிறுவருடன் கன்று ஓட்டி,
இப்படியே ஓர் வருஷம் தேவர்களும் போற்ற, எம்பிரான் மேய்த்து வந்தார்,
வேதன் மதி மயங்கி, ஆதிநாராயணனை வெல்ல முடியாது எனவே,
நீத முள்ள பாலரையும் கன்றினையும் வைத்து நீள் விசும்பில்ப் பார்த்து நின்றான்.

அறிந்தே திருநெடுமால் ஒற்றையாயக்[182] கன்றை அரும்கானில்த் தேடி நிற்க,
தெரிந்தே பிரமனவன் பழையபடிக்கு[183] அங்கு சிறுவரைச் சோறு உண்ண விட்டு,



கன்றுகளைக் காட்டில் விட்டு, நெஞ்சங் கலங்கிக் கண்ணனை வந்தே பணிந்து,
மன்று அளந்த மாலே, முன் எனையீன்ற தேவே, உன் மாயை தனை யார் அறிவார்,
உன் வயிற்றில் நான் பிறந்து மாயா சொரூபா உலகு உயிர் எல்லாம் படைத்தேன்,
என் தொழில்கள் எல்லாம் ஆதிமகாமூலம் இழந்தேன் உன் மாயகையினால்,

[181] எண்ண ஒன்னா = எண்ண முடியாத, கற்பனைக்கும் எட்டாத
[182] ஒற்றையாய் = ஒற்றை ஆளாய்
[183] பழையபடி = முன்பு இருந்தது போன்று,

ஏடு எண் 60

சிறியேன் செய்த குற்றம் அதைப் பொறுத்து அருள்வீர் என்று தெண்டநிட்டு[184] வாய் புதைத்து,



அரியோன்[185] தனைப் பணிந்து அன்னத்தில்[186] ஏறி அயனும்[187] பதி சேர்ந்தான்.
முன் சென்ற பாவினை போலக் கன்றுகளை மீட்டு முகுந்தன் கைச் சோறுடனே,
பின் சென்று கன்று ஓட்டி, முன் கட்டுச்சாதம் உண்ட பிள்ளைகள் முன்னே வரவே,
அருமையுடன் தோழர் எல்லாம் "கண்ணா வா" என்று அகங்கையாலே தழுவ,
ஒரு கவளம்[188] தின்று, முன்னே மலை எங்கும் சென்று ஓடி வந்தாய், "நீ சமர்த்தன்"



பருகுவாய் அன்னம்[189] என, அறியாது போலே பச்சை மால் சாதம்[190] உண்டார்,
பருகிப் பசியாறிய பின், வேறோர் வனத்தில்ப் பாலரொடு[191] கன்று ஓட்டி
அண்டியே போம்[192] பொழுது, கஞ்சனுடயே வல்அரக்கன் வந்தான் வஞ்சகமாய்,

---

[184] தெண்டமிட்டு = தெண்டம், அபராதம், முழங்கால் போட்டு, உக்கிபோடுதல், விழுந்து கும்பிட்டு,
[185] அரியோன் = மாயோன், திருமால், கண்ணன்
[186] அன்னத்தில் = அன்னப்பறவை வாகனத்தில்
[187] அயன் = பிரம்மா
[188] கவளம் = கைப்பிடி அளவு
[189] அன்னம் = சோறு
[190] சாதம் = சோறு
[191] பாலரொடு = பாலர்களோடு
[192] போம் = போகும்

பண்டு வினைப்பயனால் படுவது[193] அறியாமல், பாலருடனே கூடி,
சிறுவனைப் போல் ரூபம் உற்று ஊடே வருக, திருமால் அதை அறிந்து,
மருவலனைக் கொல்லவென்று பாலர்களை எல்லாம் மாதவனுங் கை பிரித்து,

ஏடு எண் 61

மைந்தன் உருக் கொண்டோன் மடிதல்



பலராமர் தன்னை அங்கே தனக்கு எதிரியாகப் பெரிய உத்தியாய் நிறுத்தி,
கொலை செய்ய வந்தவனை ஆதரவு சொல்லிக் கோபாலன் பங்கில் விட்டு,
வீரியங்கள்தான்[194] பேசி, யார் தோற்ற போதும் விளங்கச் சுமப்பது[195] என்று,
நேரில் நின்று, கச்சியதாய் ஆனைத் திரிபோட்டு நிறைந்து அணியாக நின்று,
சூழ்ந்து விளையாடி நிற்க, என் நாளும் தோறாத[196] (ய)சோதை மகனே தோற்றார்,
தாழ்ந்து வந்து மாயனங்கே பலராமன் தன்னைத் தன் தோள் மேலே சுமந்து,



மறுதிறமும் ஆடி[197] நிற்க, அடைந்தோரைக் காக்கும் மாயோன் ஏதோர் வைய்தாய்,
நிறுகன் தனைப் பார்த்து இந்த தடவை நீ சுமப்பாய் என்றிடவே,
வெத்திபுரி[198] வல்லரக்கன் ராமனைத் தூக்கி விண்ணில் எழுந்தான் மலைபோல்,

---

[193] படுவது = நிகழப்போவது
[194] வீரியங்கள் = வீரவசனங்கள், பாராக்கிரமங்கள்,
[195] விளங்கச் சுமப்பது = தோளில் ஏற்றித் தூக்கிச் சுமப்பது
[196] தோறாத = தோற்காத, தோற்றுப்போகாத,
[197] ஆடி = விளையாடி
[198] வெத்திபுரி = வெற்றிபெறும்

குத்தினான் மண்டையிலே, மூளை சிதறிக் கொடுங் காலனூர்[199] சேர்ந்தான்.
சுத்தி நின்ற பாலர் அஞ்ச, சகலரையுந் தேற்றித் தூயோனும் பாடி சென்றான்.
அத்தியை[200] முன் காத்தோனுக்கு ஈரிரண்டு செல்லாகி அஞ்சு[201] வயதாகும் பொழுது

ஏடு எண் 62



இந்திரற்குப் பொங்கலிட வேணுமென[202] நந்தன் எல்லோருங் கூட்டமிட,
தந்தை நந்தகோனிடம் போய்த் தனுக்கோடிராமன்[203] தடுத்தான் வேண்டாம் எனவே,
எந்தனுக்குப்[204] பொங்கலிட்டால் உங்களுக்கு ஏற்ற இனிய வரம் தாரேன் என்றான்,
பந்தயம் அதாய்ப் பேசி, "மலை வந்து உண்ணும் பாருங்கோ" என்றிடவே,
நடப்பது அறிந்தோன், ஆதலினால் மகன் சொன்ன வார்த்தைக்கு நல்லதென்று சம்மதித்து,
குடப்பால் சுமந்து வரக், கோபியர்கள் எல்லாம் குலவையிட்டு முன்னடக்க,



பட்டி முழுதும் திரட்டிக் கோவர்த்தன கிரிக்குப் பக்கமதில்க் கூட்டமிட்டு,
திட்டமுடன் ஆயர்களைக் கங்கா நதியில்த் தீர்த்தம் மிக ஆடி வைத்து,
பால்ப் பொங்கல் வையும் என்றார், நம்மள் ஆயப்பாடி பால் பாக்கியம் பொங்குதற்கு,
வேல் போலும் கண்மடவார் கண்ணன் மொழியை மீறாமல்ப் பொங்கல் வைத்து,

---

[199] காலனூர்= காலன் ஊர் = எமலோகம்
[200] அத்தியை = அஸ்த்தினாபுரத்தை
[201] அஞ்சு = ஐந்து
[202] வேணுமென = வேண்டுமென,
[203] தனுக்கோடிராமன் = தனுர் (வில்) கோடியுடைய ராமன்,
[204] எந்தனுக்குப் = எனக்குப்

சாதமொடு சர்க்கரை தேன் நெய் தயிர் பால் மோரும் சார[205] விட்டு ஒன்றாய்ப் பிசைந்து,
வேதமுறைப்படியே ஆதிபரன்[206] மேவும் மேருவைப்[207] போலே குவித்தார்,

ஏடு எண் 63



கோவர்த்தனகிரியைக் குடையாய் பிடித்தது

காளமுகில் மேனியினான் தளிகை எல்லாம் வாரிக் கணா பூதம்[208] போலே உண்டான்,
ஆளோடு ஆளாக நின்று "மலை வந்து இங்கு உண்ணும் அதிசயம் பாருங்கள்" என்பான்,
குண்டுமலையை வணங்கி ஆயரெல்லாம் நின்று குலவையிடும் வேளையிலே,
கண்டுநின்று கந்துருவர்[209] தெய்வேந்திரனுக்குக் கண்ணனுடைய செய்தி சொல்ல,
வானவர்கோன் கோபமதாய்ச் சப்தமுகில் ஏழையும்[210] வருணனாலே அழைத்து,
கானம்[211] குகை மலைகள் ஆயர்குலம் எல்லாம் கரையும்படி பெய்யும் என்றான்.



ஈரேழு உலகமெங்கும் கோடை காலத்தின் இடி முழக்கம் போல் முழங்க,
பாரேழும்தான் உருக, வருண பகவான் பருத்த கல்லு[212] மாரி பெய்தான்,

---

[205] சார விட்டு = சேரவிட்டு, சாரும்படியாக விட்டு,
[206] ஆதிபரன் = சிவபெருமான்
[207] மேருவைப் போலே = இமயமலையைப் போன்று,
[208] கணாபூதம் = பூதகணம், குண்டோதரன்
[209] கந்துருவர் = கந்து உருவர், கந்தர்வர்
[210] சப்தமுகில் ஏழையும் = ஏழுமேகங்கள் (சப்த=ஏழு, முகில்=மேகம்)
[211] கானம் = காடு,
[212] கல்லு = கல் போன்று மழை, பருத்த ஆலங்கட்டி மழை,

அந்தமுள்ள பாடியுள்ளோர் எல்லோரும் அஞ்சி[213] அரிகரி ராமா எனவே,
நந்தகோன்தன் மகனால் இன்று தினத்தில் நாம் இறப்பது உண்மை என்றார்.
கோவியர்கள் எல்லாம் மழையினுட[214] வாடைக் குளிர் பொறுக்க மாட்டாமல்,
ஆவி பதறிக் கதறிக் "கண்ணா அபயம்" என்று அழுது புலம்பிடவே,

ஏடு எண் 64



வண்டுரை துழாய் முடியோன்[215] கோவலரைக் காக்க மனம் இரக்கம் உண்டாகி,
குண்டுமலையைப் பிடுங்கி, இடது கையால் ஏந்திக் குடையாகவே பிடித்து,
பசுக்களையும் ஆயரையும் ஒருவாரம் மட்டும் பருமலைக்குள் வைத்திருந்தான்.
புசபெலவான்[216] இந்திரனும் தேவர் முனிவர் புஷ்ப்ப மலர்மாரி பெய்தார்.
அந்தர துந்துமிகள் ஈரேழு உலகும் அதிர்ந்து கிடுகிடு என,
இந்திரன் முதல் அண்டர்களும் அரி ராம தோஷ்த்திரம்[217] இசைந்து மகிழ்வாய்த் துதிக்க,



எருது உருக் கொண்டோன் மடிதல்

மனமகிழ்ந்து மாயவனார் விண்ணவற்கு நல்ல வாக்கு உரைத்துத்தான் அனுப்ப,
கனம் பொருந்து மாயனுடன் பட்டிகளை ஓட்டிக் கண்ணன் வந்தான் பாடிதனில்,

---

[213] அஞ்சி = அச்சம் அடைந்து, பயந்து,
[214] மழையினுட = மழையினுடைய
[215] துழாய் முடியோன் = சுருள் முடியோன்
[216] புசபெலவான் = புஜ பலவான், புஜ பலம் மிகுந்தவன்,
[217] தோஷ்த்திரம் = தோத்திரம், புகழ்மாலை,

ஆறாம் வயதினிலே தோழருடன் கூடி அனுதினமுங் கன்றோட்டி,
நாரணனும் மேய்க்கையிலே[218], கஞ்சன் அனுப்பும் ராட்சதனோர் மாபாவி
காட்டெருதாய்[219] வந்து நின்று, கால்வாறும் போது[220] கருமலையைப் பேர்த்து எறிவான்,
காட்டமுடன் போடு சத்தம் அண்டங் குலுங்க, கடியமலை போலே நிற்க,

ஏடு எண் 65



விண் அளந்தோன் தான் அறிந்து காட்டெருதின் முன்னே விரசாக[221] ஓடிவந்து,
கண்ணடகாப் பேரெருதைக் [222] களபமணி மார்பன் கை நீட்டி யின்னி[223] என்றார்,
முறுக்கினான் வாலை அவன், கண் உருட்டிக் கால்வாரி முகுந்தனை வந்தே பாய்ந்தான்,
துருசுடனே எம் பெருமான் இரு கரத்தால்க் கொம்பைச் சோறாமலே[224] பிடித்து,
திருகிக் கழுத்து ஒடிக்கக், காட்டெருதாய் வந்தோன் செத்தான் மலைபோலே.
அருகிருந்த பாலர்களும் பயந்து நடுங்கி நிற்க ஆயனவர் தான் தோன்றி

பாலர்களைத் தான் கூட்டிக் கன்றுகளை எல்லாம் பசும் புல்லில் மேய விட்டு,
கோலாகலமாக குருந்த வனத்தில்க் குளிர்ந்த மலர்தான் விரித்து,
சிறுவர் பதம் பிடிக்க, எப்போதும் தூங்காத தேசிகனுங் கண் துயின்றார்.
வரும் விதி காணுது, மைந்தர் ஒரு நாளும் போகா[225] வனம் எல்லாம் மேய்ந்து நிற்க,

---

[218] மேய்க்கையில் = மேய்க்கும் போது
[219] காட்டெருது = காட்டில் வாழும் எருது
[220] கால்வாறும் போது = காலால் நிலத்தை வாரிக் கொண்டு சண்டைக்கு வரும் போது
[221] விரசாக = விரைவாக
[222] கண்ணடகாப் பேரெருதைக் = கண்ணுக்குள் அடங்காத அளவிற்குப் பெரிய உருவத்தை உடைய எருதை
[223] யின்னி = இன்னி ?
[224] சோறாமலே = சோராமலே, சோர்வில்லாமல்
[225] போகா = போகாத, இதற்குமுன் சென்று அறியாத,

வடக்குதிசை தனிலே நஞ்சு நிறைந்த வாவி[226] ஒன்று தான் பெருக்காய்,
விடக்காத்து[227] அடிபடவே காதவளி தூரம் வெந்து நீராகி அங்கே,



ஏடு எண் 66



ஆரங்கே[228] சென்றாலும் இறப்பதே அன்றி அவர்கள் பிழைப்பதில்லை,
உளர் எங்குந்தான் பயமாய்ச் செல்லாது இருக்க, உத்தமனும் நித்திரை செய்ய,
கன்றோடி நீர்குடிக்கத் தோழர் எல்லாம் ஓடிக் காற்றடி பட்டே மடிய,
கன்றோடு பாலகரும் ஒக்க[229] மடியக் காரணம்தான் கருதி,
கண் விழித்து எம்பெருமான் மடிந்தோரை எல்லாம் காணான் போல் வந்து கண்டான்,
எண்ண ஒண்ணாக் கண்ணன் அங்கு இறந்தோரை எல்லாம் எழுப்பிக் கருணையதால்,



தமையனையும் தோழரையும் பொய்கைக் கரையில்தான் இருங்கள் என்று வைத்து,

---

[226] வாவி = குளம், மடு,
[227] விடக்காத்து = விஷக்காற்று
[228] ஆரங்கே = யார் அங்கே
[229] ஒக்க = ஒன்றாக, கூட்டமாக

இமைக்கு முன்னே மாயவனார் உயர் கடம்பில்[230] ஏறிநின்று குதித்தான் மடுவில்,
குதித்து மகா வேகமதால்க் கண்ணுக் கெட்டாத குளம் கலங்கிச் சேறாக,
கதித்த[231] விஷப் பேரரவம்[232] ஆங்காரத் தோடு கண்ணனை வந்தே வளைத்து
வாயால்க் கடித்து உதறும், உள்ளே அமுக்கும், வருகும், வெளியுள் அடங்கும்,
ஆயாசமாகவேதான்[233] சிறுவர்களும் கன்றும் அலறிப் பரிதவிக்க,

ஏடு எண் 67
கண்ணன் காளிந்தி நடனம்



கடித்து உதறியே விழுங்கிக் காளந்திநாகம் கஷ்ட்த்திப் படுத்தையிலே,
மடிப்புறையா[234] மெய்யுடையான் நந்தகோனுக்கு வலது தோள் தான் துடிக்க,
அடித்துப் புரண்டு அலறி கோன்கள் குலத்தோடு அசோதையும் பின்னோடி வர,
கடிய வனம் கடந்து கூக்குரலிட்டுக் காளிந்தி ஓரம் வந்தார்,
பாலர் கரைமீது அழுக, வல் அரவின் வாயில்ப் பச்சைமால் சிக்கி நிற்கும்
கோலமதைக் கண்டு, ஆயர் நின்று புலம்பிக், குழந்தையுடன் சாவேன் என்று



நந்தகோன்தான் பதரப், பலராமன் அங்கு நாட்டமுடன் ஏது உரைப்பான்,
பந்தமுள்ள தாதையரே அழ வேண்டாம், நீங்கள் பதறாதீர் என்று சொல்வான்,

---

[230] கடம்பில் = கடம்ப மரத்தில்
[231] கதித்த = சேறு, சகதி
[232] பேரரவம் = பெரிய அரவம், பெரிய பாம்பு,
[233] ஆயாசம் = அயர்வு, களைப்பு, சோர்வு
[234] மடி = சோம்பல்

தம்பி அழிவது உண்டோ இதுகள்[235] எல்லாம் ஓர்விதச் சந்தோசக் கூத்து, எனவே
நம்பி அவன் தங்கி நிற்க, அரவின் வாய்தன்னை நாரணனும் விட்டு அகன்று,
தாஷ்ட்டிகமதாய்க்[236] குதித்து, வாலைப் பிடித்துச் சக்கரம் போலே சுழற்றி,
நீட்டினான் கையைக், காற்கோடன்[237] அங்கே நெடிய மலை போல் ஓட

ஏடு எண் 68
ஆடினான் காளியனும் காதவளி[238] தூரம் அலைபோல்ப் படம் விரித்து,
வாடினான் சோபம் உற்றான், வால் விட்டு எழும்பி, மணிமுடிமேல்ப் பாதம் வைத்து



ஆடுகின்ற போது, அரவம் அய்யன் மிதியால் அலறி வாய் ரெத்தம்[239] எழ,
வாடுகின்றான் சாவது போல், அரவத்தின் சொந்த மங்கையர்கன் ஓடி வந்து
“சாமி, நீ ஆட என்றால் இந்த எளிய சர்ப்பமோ தாங்குவது,
நாம் இனி என் செய்வம் என்று, மாங்கிலியப் பிச்சை, நாதனே தாருமென”



வீழ்ந்தார் பரிதவித்தார் கோவிந்தா என்று விந்தை மலர்ப் பாதம் அதில்,
தாழ்ந்தார் தொழுதார், உன் தஞ்சம் என, மாயன் தயவு உகந்து கீழ் இறங்கி,
வாராய் நீ, காளிகனே, இம் மடுவில் வந்த வகை என்ன, செல் எனவே,

---

[235] இதுகள் = நடக்கும் நிகழ்ச்சிகள்
[236] தாஷ்ட்டிகம் = தாஷ்டீகம் = தாட்டிகமாய்
[237] காற்கோடன் = காளந்தி நாகத்தின் பெயர்
[238] காதவளி = காத வளி, காதம் = சுமார் 12 கி.மீ.
[239] ரெத்தம் = இரத்தம்

நேராய் அவன் வணங்கி, வாய் திறந்து கெஞ்சி, நெடியோன் தனக்கு உரைப்பான்,
மண்றாசேறும்[240] எங்கள் குலம் கருடனைக் கண்டால் வணங்குவது உண்டு எப்பொழுதும்,
வணங்காது நானிருந்தேன், என்னோடு எதிர்த்து வன்போர் செய்தான் கருடன்,

ஏடு எண் 69



ஆழ்வாற்கு[241] நான் பயந்து, இந்த மடுவில் அமர்ந்தேன், உயிர் பிழைத்தேன்,
தாழ்வு ஏது செய்தாலும் கொண்டு, பொறுத்து என்னைத் தற்காற்க வேண்டும் என்றான்,
நேர்ந்து கெஞ்சும் வல்லரவே, இந்த மடுவில் நிறைந்த விஷம் நீ வாங்கி,
சார்ந்த இடம் செல் எனவே கேட்டு விஷம் வாங்கிச் சாமிதனைப் பார்த்து உரைப்பான்,
கொல்வானே செங்கெருடன், அச்சுதானந்தா கோவிந்தா கார்[242] எனவே,
வெல்வானோ உன் சிரசில் என் பாதரேகை விளங்குவதால் அப்போ எனவே,



நதியை விட்டுக் காடு சென்றான், மடுவதை விட்டே நீஞ்சி ராகவன் வந்தான் கரையில்,
கதறி நின்ற அன்னை தந்தை ஆயரொடு தோழர்களுங் கண்ணனை வந்தே தழுவி,
சுதி பெருகுங் கண்ணனுக்குத் தேகத்தே தோனும்[243] சோர்வு ஒன்றும் இல்லாமல்
பொதுவர் எல்லாம் நீராட, மேற்குத் திசையில்ப் போய் அடைந்தான் சூரியனும்,
தங்கினார் கானகத்தில் ஆள்ப் பாடியுள்ள சனங்கள் எல்லாங் கண் துயின்றார்,
கங்கைக்கரை ஓரம் விழி துயிலும் போது கார்மேக மேனியனும்,

---

[240] மண்றாசேறும் = மண்தான் சேரும் ?
[241] ஆழ்வாற்கு = கருடாழ்வாருக்கு
[242] கார் = கா, காப்பாற்று
[243] தோனும் = தோன்றும்

ஏடு எண் 70



கண்ணன் அக்கினியை உண்டது

கண்ணை இமை காப்பது போலக் கார்மேக வண்ணன் காத்திருக்கும் போதினிலே,
அண்ணையன்று[244] இராத்திரியில் மூங்கில் வனத்தில் அடங்காத தீய்ப் பிடித்து,
வனங்கள் எல்லாம் நீராக்கிச்[245] சுற்றி வளைந்து வருதைக் கண்டு ஆயரெல்லாம்,
இனங்கள் எல்லாம் சோர்ந்து நிற்கக் கண்ணனும் கண்டு இருங்கள் என்று நன்மை சொல்லி,
அச்சுதனும்தான் ஓடி ஆய்ப்பாடி தோறும் அள்ளி வெண்ணை உண்டது போல,
உச்சிதம்[246] சேர் மாயவனார் காட்டு அனலை வாரி ஓர் நொடியில் உண்டனனே.



சிந்தை தெளிந்து ஆயர் எல்லாம் விடிந்தவுடனே சென்றார்கள் தன் பதிக்கு,
மைந்தர்களும் கண்ணனும் மாயப் பலராமரோடு வனங்கள் எல்லாம் பந்தடித்து,
உரைந்தார்கள் பாடிதனில், எட்டு வயதாகி ஒன்பது பிராயம் அதில்,
நிறைந்த பலபத்திரற்கு ஈராறு[247] வயது நெருங்கி வளர்ந்ததுவாம்,
கச்சு[248] அணிந்த பூண் முலைமார், கோபியர்கள், ஓர் நாள் கங்கையில் வந்தே கூடி,
பச்சை வர்ணப் பூந்துகில்கள் எல்லாம் களைந்து பதிவாய்க் கரையில் வைத்து,

---

[244] அண்ணையன்று = அன்றைய தினத்தில்
[245] நீராக்கி = சாம்பலாக்கி
[246] உச்சிதம் = மாயை, இரகசியம், அந்தரங்கம்
[247] ஈராறு = இரண்டு ஆறு, பன்னிரண்டு
[248] கச்சு = கச்சை, பெண் மார்பில் அணிந்து கொள்ளும் துணி, ஆடை

ஏடு எண் 71



கண்ணன் துயில் எடுத்து ஒழித்தல்



கருங்கண் மடமாதர் எல்லாம் யமுனா நதியில்க் கலைகள்[249] இன்றி நீராட,

[249] கலைகள் = ஆபரணங்கள் ஆடைகள்

நெருங்கி வந்து கண்ணன் அங்கே, சேலை எல்லாம் வாரி[250] நீள் கடம்பில் ஏறினனே,
கண்டார்கள் மாதரெல்லாம் கையை நெறித்துக் கங்கைக்குள்ளே ஒளிந்து,
வண்டார் குழல் தாழ, வாய் திறந்து கெஞ்சி மாயோனைப் பார்த்து உரைப்பார்,
யாராகிலும் புவியில் அப் பேதைத் துகிலை ஆடவர்கள் தீண்டுவரோ,
“தா” எனக் கேட்கப், புன்சிரிப்புக் கொண்டு தாமோதரன் உரைப்பான்.

வாடி பல வேசிகளா, இந்த விதம் எந்த மண்டலத்தில் கண்டதுண்டோ,
ஆடவர் ஊடாடாத[251] அம்பிகை நீராடும் ஆகாச கங்கையிதோ,
அம்மணமாய் நீராட, மாதர்களே உங்களுக்கு அடுக்குமோ இல்லை என்றான்,
விம்மி விம்மியே அழுது இன்றோடே நம்மள் வெட்கம் எல்லாம் கெட்டது என்று,
செய்தது எல்லாம் குற்றம், எங்கள் மானம் கெடாது சேலை தந்து காரும் என்றார்,
வைது பல விதமாய், வெளியேறி வந்து வணங்கினால்த் தாரேன் என்றான்.

ஏடு எண் 72



முடி அவிழ்த்து முன் போட்டு, ஒரு கரத்தினாலே மூடியே அல்குல்தனை,
கடிதில்க்[252] கரையில் வந்து, ஒரு கரத்தினாலே கன்னியற் சேவித்து நிற்க,
திருமால் மகிழ்ந்து உரைப்பார், சலாம்[253] செய்து ஏய்க்க தீன்[254] குலப் பட்டாணியோ நான்,
இரு கரம் தூக்கித் துதித்தால் வெட்கமில்லாப் பெண்காள் ஈய்வேன் கலையை என்றார்
நாம் இனி என் செய்வம் என்று கோபியர்கள் எல்லாம் நதியில் ஓடிக் குதித்து,
தாமரைகள் தேக்கு இலைகள் வனத்தில்ப் பருத்த தளைகளை எல்லாம் பறித்து,

---

[250] வாரி = வாரி எடுத்து
[251] ஊடாடாத = ஊடே ஆடாத,
[252] கடிதில் = விரைந்து
[253] சலாம் = ஒரு கையினால் வணக்கம் செய்வது
[254] தீன் = இலத்தீன், இத்தாலி, ரோம்

வலுத்த கொடி அறுத்து இடையில் வைத்துக் கட்டி, மானந்தனை மறைத்து,
நலித்தே கரையில் வந்து, இருகரம் மேல்க் கூப்பி நங்கையர் சேவித்து நிற்க,



இரக்கமுடன் கீழ் இறங்கி, மாதர்கட்கு எல்லாம் ஈந்தான் கலை முழுதும்,
சிறக்கத் துயில் உடுத்திக் கண்ணனுடன் அங்கு சேர்ந்து விளையாடல் உற்றார்,
முலை நெருடுவான் சிலரை, முத்தமிடுவான் சிலரை, கலைகள் உரிவான் சிலரைக், கட்டியனைவான் சிலரை,
மை இடுவான், பொட்டு இடுவான், மாயா சொரூபன் மலர்கள் முடிப்பான் சிலர்க்கு,

ஏடு எண் 73



கண்ணன் வேயங் குழலூதல்

கைவளை சேர்ப்பான் சிலர்க்கு, அவர்கள் மிகக் கொண்ட காதல் தவிழ்ப்பான் சிலர்க்கு,
தகுந்தபடி லீலை செய்து, அனைவோரும் கூடிச் சம்பிரமமாய் நீராடி,
முகுந்தன் பதிசேர்ந்து, பசு மேய்க்குங் காலம் முன்னான்கு[255] பிராயம்[256] அதில்
பூரண[257] சந்திரோதயத்தில், மழை பொழிந்து ஓயப், பூங்கா வனத்தில் வந்து,
சீருடனே வேய்ங் குழலை மணிவாயில் வைத்துச் செந்திருமால் ஊதல் உற்றார்,
ஊதும் தொனி[258] கேட்டு மதியின் பரிகள்[259] ஓடாமல் விண்ணில் நிற்க,

---

[255] முன்னான்கு = மூன்று நான்குகள், 12,
[256] பிராயம் = பருவம், வயது
[257] பூரண = பூரணை, முழுமதி, பௌர்ணமி
[258] தொனி = பாடல் இசை மெட்டு
[259] மதியின் பரிகள் = சந்திரனின் தேர்க் குதிரைகள்

மாதர் முலை உண்ணாமல்ப் பசுங் குழந்தை யெல்லாம் மாயன் இசை கேட்டு உறங்க,
விண்ணுலகோர் போற்றிடவே, ஆதிசேடனுக்கு விஷப்பல் அமுது ஒழுக,
வண்ண விளிமங்கையர்கள் புருஷர்களைத் தூங்க வைத்து வந்தார், பூங்கா வனத்தில்,



சாந்து சவ்வாது பன்னீர் களபகம் கஷ்த்தூரிதான் அணிந்தான், மாதர்க்கு
சேர்ந்து அனைந்தார் காயாம்பு, சோலைகள் எங்கும் சிறந்தார், அவர்க்கு அவராய்,
தீராத ஆவலொடு கண்ணனைக் கூடித் தீர்ந்து தெளிந்தே உரைப்பார்.

ஏடு எண் 74



சீராத ஆடவர்கள், எங்கு சென்றீர் என்று தெண்டிப்பார்[260], காது அறுப்பார்,
என்ன செய்வோம் கண்ணா, உபாயம் சொல்லென்று இறையவனைப் போற்றிடவே,
மன்னவர்கள்தான் விழியார்[261] செல்லுவீர் என்று மாதவனும்தான் அனுப்ப,
குமுகுமென[262] நிறைந்த ஆதிமகாமூலம் கமுக[263] வனச் சோலைவிட்டு,
தமையனொடு பஞ்சணை மேல் மாயாவினோதன் சயனித்தார் முன்போலே,
எங்கும் நிறைந்த பொருள் தன்மயனோடு அங்கு இடையர் பதி காத்து இருக்க,

---

[260] தெண்டிப்பார் = தண்டிப்பார், தண்டனை கொடுப்பார்,
[261] விழியார் = முழித்து இருக்க மாட்டார்கள், (உறங்கி இருப்பார்கள்)
[262] குமுகுமென = கூட்டமாய், குவியலாய், (பலராய் உருவம் எடுத்திருந்த எல்லா உருவங்களும் ஒன்று கூடி)
[263] கமுக = கமுகு மரம்



சங்கு சக்கர பாணிதனை கொல்ல என்று எண்ணி சண்டாளக் கஞ்சனவன்,
வளையாத வில் முறிந்தான், இராட்சதரோடு மற்ற மன்னர் மல்லர் காவல் வைத்தான்,
களையா மத ஆனை, அஞ்சுனூர் வேழம் கதி கொண்டதாக வைத்து,
தேசத்து அரசருக்கும் வலுவில் மிகுந்த சேவகர்க்கும் ஆள் அனுப்பி,
வாசனை சேர் தேர்ப்பாகன் அக்குரூரன் தன்னை வரவழைத்து அங்கு ஏது உரைப்பான்,
ரத்தின மணித்தேர் நடத்தி, ஆயர்பதி சென்று, நந்தகோன் தன் வளவில்

ஏடு எண் 75



கண்ணனை அழைக்க அக்ரூரன் வந்தது

வெற்றியுள்ள கண்ணன் என்று அங்கே இருப்பான், விரசுடனே[264] தேர் ஏற்றி
கூட்டிவா என்று அனுப்பத், தேர்ப்பாகன் அங்கே கும்பிட்டு, நல்ல நல்ல தென்று,
தாஷ்ட்டிதமாய் வாசிகளை[265] ரதத்தினில் பூட்டித்தான் நடத்தினான் தெருவில்,
சந்ததமும் சிந்தைதனில் "அரிகரி" என்று தடந்தேர்தனை நடத்தி,
விந்தைமங்கை[266] தன்னருள் சேர் வடமதுரை விட்டு விளான்[267] வின் வனந்தான் கடந்து
வான்பரியின் வேகமதால்க் காடு செடி மேடு வாய்ந்த மலை தாண்டி, அங்கே

---

[264] விரசுடனே = விரைவாக, உடனே

[265] வாசிகளை = குதிரைகளை

[266] விந்தை மங்கை = காளிதேவி

[267] விளான் = ஒருவகை மரம். வனப்பகுதியில் விளான் கிலா பலா சொத்துகிலா காரை இலந்தை புளி நாவல் முதலானவை சுவைமிகுந்த பழமரங்களும், வேம்பு சந்தனம் வன்னி அத்தி வாகை மரங்களும் இருக்கும்.
கிலா, விளான், சொத்துகிலா, காரை, இலந்தை, புளி, நாவல் உள்ளிட்ட விலங்குகள் விரும்பி சுவைக்கும் பழ



தேன் சொரியும் பூங்காவும் யமுனா நதியும் சீக்கிரத்திலே கடந்து,
ஆய்ப்பாடி வீதியிலே ரதம் வருகக் கண்டு அனைவருந்தான் திகைத்து,
வாய்ப்பான பாகனைப் பார்த்து, இங்கே ரதம் வந்த வயணம்[268] என்ன சொல்லெனவே,
நந்தகோன் தன் மகனை அழைத்து வர எங்கள் ராசன் அனுப்பி வைத்தார்,
எந்த மனை சொல்லும் என்று மறு வீதி செல்ல, எம்பெருமான் தான் அறிந்து,
அடுத்து வந்தான் தொண்டன் என்று, சந்தோஷமாக அண்ணல் பலராமனுடன்

ஏடு எண் 76



நடுத் தெருவில் ஓடி வரத், தேர்ப்பாகன் கண்டு நாதன் என்று தாழ் பணிந்து,
வணங்கியே தேரில் வைத்துக் கஞ்சனுட சேதிவகை விபரமாய் உரைக்க,
இணங்கியே ஓர் மனதாய் மாளிகையில் சென்று இருந்தே மகிழ்வுடனே,
அண்ணை எனும் சோதை இடம் தேர்ப்பாகனுக்கு அமுது படைக்கவென்று,
எண்ணை[269] இட்டு நீராட்டி அக்குரூரனுக்கு இனிய சாதம் படைத்து,
சந்தனம் கஷ்த்தூரி கெந்தம் வாடை சவ்வாது தான் பூசி மாலையிட்டான்.

[268] வயணம் = காரணம், நோக்கம்
[269] எண்ணை = நல்லெண்ணை



நந்தன் அங்கு வந்து, கொல்ல வந்த தூதனுக்கு நன்மை செய்வது என்ன வென்றான்,
நீ என்ன கண்டறிவாய், அழைக்க வந்த தூதன் நித்தம் என்னைப் போற்றும் அன்பன்,
ஞாயம்[270] நெறி மாறாதான், அது அறிந்து யானும் நன்மை செய்தேன், போ எனவே,
நந்தகோன் மெய் மகிழ்ந்து, கண்டு அறிவோம் என்று நடந்தான் தன் மனைக்கு.
அந்தமுடன் அன்னம் உண்டு, தூதன் வந்த சேதி அருமை யுடனே பேசி,
பேசாமலே போனான் கண்ணனும் தூதனும் பலபத்திரன் மூவருமாய்,

ஏடு எண் 77



ஆசார மேடைதனில் மெத்தை விரித்து அருள்க் கண் துயின்று எழுந்தார்,
கோழிக் குரல்[271] தனிலே நந்தகோன் தனையும் கோவலரை கூட்டம் இட்டு,
நாளைக்கு மல்ப்போராம்[272], எந்தனைக் கொல்ல ரதம் விட்டான் கஞ்சன் இங்கே,
ஆகையால் நீங்கள் எல்லாம் உடுகரைகள்[273] கொண்டு அரசனைப் போய்க் காண்பதற்கே,
ஏகுவீர் முன்னாலே, வடமதுரை ஓரம் இளந்தோப்பில் போயிருங்கள்,
தேர் ஏறி ஓர் நொடியில் பின்னால் வருவோம், செல்லுவீர் என்று அனுப்பி,

[270] ஞாயம் = நியாயம், நீதி,
[271] கோழிக் குரல் = சேவல் கூவும் நேரம்
[272] மல்ப்போர் = மல்யுத்தம், ஆயுதங்கள் ஏதுமின்றிச் சண்டை செய்தல்
[273] உடுகரை = சீர் கொடுத்தல்



கண்ணன் கஞ்சன் பட்டணம் வந்தது

தாறாறும் பூந்த துழவோன் விடிந்தவுடனே ஸ்தானபான முடித்து,
மாதாவும் அன்னமிடத் தூதனுடன் உண்டு வங்கணத்[274] தோழருடன்,
ஆதாரவார்த்தை யதாய் அசோதைக்கு உரைத்து, அக்கணமே தேர் ஏறி
மீட்டு என்றான் வாசிகளை, அக்ரூரன் அப்போ மாட்டினான் கைச் சவுக்கால்
நாட்டமுடன் தேர் நடக்க, யமுனா நதியில் நலம் கண்டான் தேர்ப்பாகன்,
வாட்டம் எல்லாம் தீர்ந்து அவனும் தேரை நடத்தி வனங்கள் பலவும் கடந்தார்,

ஏடு எண் 78



தாஷ்டிகமாய் ஓர் பொழுதில் வடமதுரை ஓரம்தான் வந்து தேர் ரதமும்,
ரதத்தை நிறுத்து என்றான் உத்தவனும்[275] அப்போ[276], நாரணரைத் தாழ் பிடித்து,
பதத்தினில் வீழ்ந்தே உரைப்பான், இன்றைக்கு என் வீட்டில் பாங்காய் அமுது அருந்தி,
விடிந்தவுடனே எழுந்து கஞ்சனுடைய வில்வேள்விதான் முடிப்பாய்,
நடந்தால்ப் பாதம் நோகும், வாங்கள்[277] என்று சொல்ல, நகைபுரிந்து ராகவனும்
உயிர்த்துணை நீ உத்தவனே, உனது அரசன் கேட்டால், உடனே உன்னைப் பகைப்பான்,

---

[274] வங்கணம் = வலிமை மிகுந்த கூட்டத்தினர்.
[275] உத்தவன் = வசுதேவரின் சகோதரர் தேவபகாரின் மகன்
[276] அப்போ = அப்பொழுது
[277] வாங்கள் = வாருங்கள்



தைரியமாய்ப் போய் இருப்பாய், நாளை வருவேன் தருவேன் பரமபதம்,
போ எனவே தான் அனுப்பிச், சினேகிதரும் தாமும் பொதுவர் தங்கும் மாந்தோப்பில்,
தாபமுடனே ஏகி, நந்தன் முதல் மற்ற சகலருக்கும் சேதி சொல்லி,
நாக அணை மேல்ப் பள்ளி கொள்வோன் தந்தை மடியில் நாடு மெய்க்கக் கண் துயின்றான்,
வேகமுடனே எழுந்து தோழரை நோக்கி விளம்புவார் மாயவனார்,
வந்தோம், நாம் இன் நகரில் வாய்ந்து நாம் கூடி வளம் பார்க்கலாம் எனவே,

ஏடு எண் 79
அந்தி நேரத்தனிலே ஆயன்பெருமாள் அரிய கடைவீதி சென்றார்,
காளி என்று பேருடையோன்[278] வண்ணான் ஒருவன் கஞ்சன் உடை வெளுப்போன்,
காளமுகில் மேனியன் முன் பொதியைச் சுமந்து கடை வீதி தன்னில் வர,



வந்தவனைக் கண்டு அதட்டி வானமசொரூபன் வஷ்த்திரம் ஒன்று தா எனவே,
அந்த வண்ணான் கேலியதாய், எங்களுடைய அரசன் உடுப்பு, ஆதலால்,
அடி இடையர்தன் குலத்தோர் இந்த உடை கட்டத் தகுமோ என்றான் காளி,



[278] பேருடையோன் = பெயர் உடையோன்

துடியுடனே காளியனைத் தலையைத் திருகித் தூர எறிந்தான் தெருவில்,
கண்டோர் பயந்து ஓட, வஸ்த்திரத்தில் ஒன்றைக் கண்ணன் எடுத்து உடுத்தி,
அண்டி நின்ற தோழருக்குப் பொதியை அவிழ்த்து, ஆளுக் கொன்றாய்க் கொடுத்து,
வந்தார் மறுதெருவில், சிற்பி ஒருவன் மாயன் வந்தானென்று அறிந்து,
தந்தான் பட்டங்கி[279] ஒன்று, முத்துக் குல்லாவும்தான் அணிந்து போற்றி நின்றான்,
தானவனாய் நின்ற வள்ளல் சிற்பியனுக்கு அங்கே தற் சொரூபமே காட்டி,

ஏடு எண் 80



வானவற்கு முத்தி தந்தோன், மறுவீதி செல்ல மாலை போட்டே பணிந்தான்,
உனக்கு என்ன வேணும் என்று தேவகி தன்பாலன் உரிமையுடனே கேட்க,
எனக்கு உந்தன் பாதம் அதை மறவாதிருக்க இனிய வரம் தாரும் என்றான்,
தந்தோம் என்றே நடக்க ஏழு கூன் உள்ள தாயக் கிழவி ஓடி வந்து,
சந்தனம் கஷ்த்தூரி கெந்தம் புனுகு சவ்வாதுதான் அணிந்து போற்றி நின்றாள்,
காலால்ப் பதம் மிதித்து முட்டிவாய் தொட்டுக் கையால் நிமிர்த்திடவே,



வாலைப்[280] பருவமதாய் கூன்மாறி நின்று வாரும் என்றாள் மாளிகைக்கு,
கருங்கண் மடமாதரசே, இங்கே நான் வந்த காரியம் எல்லாம் முடித்து
வருவேன், போ என்று அனுப்பி, வில்ச் சாலை தன்னில் வந்தார்கள் கூட்டமுடன்,
இந்திர தனுவைப் போலும், முன்னாள்ச் சனகன் இடத்திருந்த வில் போலும்,

---

[279] பட்டு அங்கி
[280] வாலைப் பருவம் = 16 வயதுப் பருவம்

வந்தவர் எல்லாம் திகைத்து அசையாத வில்லை வளைப்பவர்கள் இல்லை என்பார்,
கம்ப மதயானை அது தும்பிக்கையால் வாரிக் கரும்பை முறிப்பது போல்,

ஏடு எண் 81



வெம்பி அந்த வில் ஒடித்து இரண்டா எறிந்து, விரசில் வந்தார் ஆயரிடம்,
சூரியன் கண்டே பயந்து, தேர் முறிப்பான் என்று,[281] துருசாக[282] மேற்கே ஒழிந்தான்.
யாரும் அறியாத பொருள், காயாம்பு வண்ணன் ஆயரிடம் போயிருந்தான்,
மந்திரிகள் காரியப் பேர் கஞ்சனிடம் சென்று, வாய் பதறி, ஏது உரைப்பார்,
எந்த விதம் சொல்வோம் நாம், சாயங்கால நேரம் இடைக்குலம் என்றார் சிலபேர்,
வந்தான் சிறுவயதாய், வண்ணானைக் கொன்று வலுத்த வில்லைத்தான் முறித்து,

சந்தோஷமாய் நடந்தான் என்று சொல்லக், கஞ்சன் தணல் போல் மனம் வெதும்பி,



உருவிய கூர் வாலுடனே உளன் உறக்கம் இன்றி, ஓய்ந்து இருந்தான், ரா[283] முழுதும்
வெருவி அவன் திகைத்து விடியட்டும் என்று வீரசிங்கம் போலிருந்து,
கடைச் சாமத்தே[284] எழுந்து, மந்திரி பிரதானி காவலரை கூட்டமிட்டு,
படைத் தலைவர் சூழ்ந்து நிற்க, அக்கிரமமாய்க் கஞ்சன் படபடத்து வார்த்தை சொல்வான்,
இரும்பு உலக்கையைக் கொடுத்துப் பார மத யானையை இறுத்து என்றான் வாசல் தனில்,

---

[281] கண்ணன் சூரியனது தேரை முறித்துவிடுவான் என்று சூரியன் பயந்துபோய் விரைவாக மேற்கே மறைந்தான்.
[282] துருசாக = விரைவாக
[283] ரா = இரவு
[284] கடைச் சாமத்தே = கடைசிச் சாமத்தில், (விடியும் முன்பே)

ஏடு எண் 82



விருப்பமுடன் ஓலை விட்ட வேந்தர்களை எல்லாம் விடியும் முன்னே கூட்டமிட்டான்,
மல்லர்களில் ஒன்பது பேர் வேசங்கள்மாறி[285] மானிடர் போல் உள்ளடைத்தான்,
வல் இருள்தான் நீங்கிய பின் கோட்டை மீதேறி மற்போர் அறையும் என்றான்,
போர் முரசு அங்கே அடிக்க, இளந் தோப்பில்த் தூங்கும் புண்ணியர் தன் காதில் விழ,
வேர்த்து எழுந்து, ஆயரையும் தோழரையும் கூட்டி, வேந்தனிடம் போங்கள் என்று,
தம்பியும் அண்ணனுமாய் ஒரு சாமம் மட்டும் தங்கி விளையாடி அங்கே,



வம்பனை நாம் கொல்வதற்கு இதுவேளை என்று வடமதுரை வீதி சென்றார்,
கண்டோர் பதம் பணியக், கன்னியர்கள் மையல் கொள்ளக், கண்ணன் மிக நடக்கக், கடும் பாவியான கஞ்சன்
உயிர் மடிக்க வந்ததொரு ஆதிமகாமூலம், உம்பர் சகாயன் என்பார்,
சேயிழைமார்[286] மையல் கொண்டு கைவளைகள் சோர்ந்து சிலைகளைப் போல்ப் பார்த்து நிற்க,
நிறை நிறையாய் வீதி யெங்கும் அதிசயம் பார்த்து, ஐயன் நேர் கோட்டை வாசல் வர,
வரையது போல் யானை அது மும்மதங்களோடு வாய்ந்த துதிக்கை தனிலே,

ஏடு எண் 83

[285] வேசங்கள் மாறி = மாறுவேடத்தில்
[286] சேயிழை = செம்மை + இழை, அழகான, சிறந்த அணி, நல்லணி,
சேயிழையார் = சிறந்த ஆபரணங்களை அணிந்த பெண்கள்



கண்ணன் யானை மருப்பை ஒடித்தது

உலக்கை பிடித்து யானை நிற்க, ஆதிமகாமூலம் விலக்கடா[287] தூர என்றான்,
வலக்கை தட்டிப் பாகனவன் “தரிதரி” என்று மாதவன் மேல் மோத விட்டான்,
மோத விட்ட வாரணமும் மும்மதங்கள் மீறி முறுக்கி அடித்திடவே,
மாதவ, கோவிந்த முகில், உரல் போன்ற காலில் மறைவான், முன்னே வருவான்,
குத்தும் அது, பூமியுடன் சிறு துருப்பு போலே கொம்பு ஊடே நின்றிடுவான்,
எத்தும், அது தூளாக[288] எங்கோன் மகன் பிடித்து இழுத்து எறிவான் வீரிடவே,



[287] விலக்கடா = விலக்கு அடா, (யானையை விலக்கி நிறுத்துமாறு அதட்டினான்).

[288] தூளாக = யான தூள் ஆகும்படியாக



உலக்கை தனைப் பறித்துத் தமையனிடம் எறிந்து,
உலகளந்தான் போய்ப் பாய்ந்து,
பலத்த மதவாரணத்தைக் குலுக்கி எறியப் பாகனும்
கீழே வீழ்ந்து இறந்தான்,
வேழம் அது தான் வீழ்ந்து எழுந்தரிக்கும் முன்னே
மிதித்தான் உறத்துடனே,
மூளை சிந்தியே மடிய, வாரணத்தின் கொம்பில்
ஒன்றை முகுந்தன் பிடிங்கினான் வெஞ்சினமாய்,
பலபத்திரர் ஓடி வந்து மற்றொர் மறுப்பைப்
பிடுங்கினான் வெஞ்சினமாய்,
நிலம் அளந்தோன் திரேகம் எங்கும் ரத்த மயமாகி
நிபத்தினுட கொம்பு அதனை,

ஏடு எண் 84

இரு பேரும் தொழில் வைத்து, ராசர் சபையில் எதிர்
வந்தார் பாலர்களும்,
வெறுவியே கோன்குலத்தோர் கை கட்டி நிற்க,
வேந்தர்சபை வீற்றிருக்க,
வாள் எடுத்துக் கைப்பிடித்துக் கஞ்சன் சினந்து, மற்போர் செய் பார்ப்போம் என்றான்,
ஏலே, இடைக்குலம் நான், மற்போர் புரிய எதிரி யார் எங்களுக்கு,
வேந்தனே சொல் எனவே, இரண்டு பேர் மல்லர் வேழம் போல் வந்து நிற்க,
சார்ந்த குணத்தழகன் ஆதீமகாமூலம் தார் வேந்தர்க்கு ஏது உரைப்பார்.





இப்பெரிய மல்லரொடு நாங்கள் சிறுவர் பொர[289] ஏற்குமோ மா சபைக்கு
செப்புவீர் என்றிடவே, கொடும் பாவி கஞ்சன் செங்கண் சிவந்து உரைப்பான்
வரி வில் ஒடித்தவன் யார், நேத்து அந்திநேரம் வண்ணானைக் கொன்றவன் யார்,
கரியின் மருப்பு ஒடித்தாய், போர் புரியாவிட்டால்க் கணத்தில் உயிர் கொல்வேன் என்றான்,
வரச் சொல் என்றான் மாயன், கச்சைகள் கட்டி வந்தார் இரண்டு மல்லர்
திறத்துடனே கை கோர்த்துச் சாணூரனோடு[290] செந்திருமால் சேரல் உற்றார்,

ஏடு எண் 85

கண்ணன் கஞ்சனைக் கொன்றது

முட்டிதனும் ராமனுமாய்க் கட்டிப் புரள, முனைவீரர் மெய்நடுங்க,
கட்டி உருண்டார்கள், கை மடித்துக் கொட்டிக் கட்டி, ஒருவருக்கு ஒருவர்
குட்டினார் கிட்டி, அங்கே சாணூரன் மார்பில் அண்ணல் குத்துவிடவே சாய்ந்தான்,
முட்டிதனை ராமன் அப்போ வலதுகை ஓங்கி மூளை சிந்தக் குத்தல் உற்றான்,
பூதங்கள் போல் மடிய, உள்ளே இருந்து புறப்பட்டார் பின்பு இருவர்,
வாது சொல்லிப் பாய்ந்து வந்து கை கோர்க்கும் முன்னே, வாரி அடித்தே மடித்து,



[289] பொர = பொருதுதல்

[290] சாணூரன் = கம்சன் ஏவிய இரண்டு மல்லர்களின் பெயர்கள் - சாணூரன், முட்டிகன்.
கண்ணன் சாணூரனுடன் சண்ட செய்தார். பலராமன் முட்டிதனுடன் போர் செய்தார்.





மீதமுண்டோ மல்லர் என்றான், மறைந்திருந்தோர் எல்லாம் வெளியேறி ஓடல் உற்றார்,
காதகனும் மெய் பதறித் தலையாரி மற்ற காவலரைப் பார்த்து உரைப்பான்,
வண்டப்[291] பயல்கள் இவர் தன்னைக் கொடுபோய் மாறுகால் மாறுகை[292] வாங்கி,
கண்டன் வசுதேவனுக்கும் தேவகிக்கும் முன்போலக் கால் விலங்கு பூட்டும் என்றான்,
அரசர் எல்லாம் பார்த்து நிற்க, வசுதேவ ராசனும் மற்ற ஆயர் எல்லாம் கண் கலங்கி
கர தலத்தில்க் கொம்பு[293] ஏந்திக், கஞ்சன் அருகில்க் கண்ணன் வந்தான் கோபமுடன்,

ஏடு எண் 86
வெட்டினான் வாள் அதனால், வைகுண்ட வாசன் வேழத்தின் கொம்பு அதனால்
தட்டினான், சாதகமாய் மாமனுடைய சமத்து அறியலாம் எனவே,
மீண்டும் அவன் வெட்டல் உற்றான், கைவாள் பறித்து வேந்தர்களுக்கு முன் எறிந்து,



[291] வண்டப் பயல்கள் = வாண்டுப் பயல்கள், சிறுபிள்ளைகள்
[292] மாறுகால் மாறுகை = ஒருகாலையும் ஒருகையையும் வெட்டிவிடுவர் (கொடிய தண்டனை)
[293] கொம்பு = யானையின் தந்தம்

தாண்டிச் சிகை[294] பிடித்துக், கஞ்சனுட மார்பைத்தான் கிழித்தார் கொம்பதனால்,
செங்கண்மால் தன் கரத்தால்க் கஞ்சன் இறந்த உடனே சேர்ந்தான் வைகுண்டபதி,
அங்கு அவன் சகோதர்கள் எட்டுப் பேர்வந்து அச்சுதன் மேல்ப் போர் புரிய,



வந்து எதிர்த்தோர் தம்மை எல்லாம் கஞ்சன்கை வாளால் மாய்த்தே ஒரு நொடியில்,
அந்த இடத்து திடத்தில் வேந்தர்கள் முன் இறந்தோரை எல்லாம் அடக்கிச் சடங்கறுத்து[295],
பாட்டனுக்குர சேனன்[296] உடன் அரண்மனையில் வந்து பகவான் மகிழ்வுடனே,
வாட்டம் ஒன்றும் எண்ணாதே, வடமதுரை நாட்டை மணிமகுடஞ் சூட்டுகிறேன்,
தேறி இருப்பீர் எனவே, பேரணிகள் சூழத் தேவகி தன் வீடு சென்று,
ஆறுதலாய் அண்ணருடன் தந்தை தாய் தன்னை அடைவுடனே தாழ் பணிந்தார்.

ஏடு எண் 87



அழுதார் ஆனந்தமதாய், வசுதேவராசன் அண்ணல் தனை முத்தமிட,
தொழுதார் இருபேரும், நாங்கள் பயின்ற சுவாமியை காரும் என்றார்,
பட்டணத்து உள்ளோர்களுக்கும், ஆயர்களுக்கும் மற்ற பார் மன்னர் தங்களுக்கும்,
இஷ்டமுடனே விருந்து செய்விக்க வேணும் என்று இயம்பினார் தந்தையிடம்,
சுதன் சொல்த் தவறாமல் அருசுவைகளோடு துருசாய்ச் சமையல் செய்து,
பதம் தருவான் மாயன் என்று, வந்த பேர்க்கு எல்லாம் பாங்காய் விருந்து செய்து,

---

[294] சிகை = தலைமுடி

[295] சடங்கறுத்து = சடங்குகள் செய்து

[296] பாட்டனுக்குர சேனன் = பாட்டனுக்கு உரிய மன்னர் உரிமையுடன்



விருந்து உண்டு, பாக்கு அருந்தி, சந்தனம் கஷ்த்தூரி மெய் மகிழ்வாய்த்தான் பூசி,
பொருந்தி யனவோர்[297] நடக்க, நந்தகோன் அங்கே பொறி கலங்கி மெய் அசந்து,
எந்தன் ஐயா, கண்மணியே, தாயார் தவிப்பள், எழுந்து வா போவம் என்ன,
தந்திர வித்தைக்காரன், மாயா வினோதன் தன்மை ஒன்றும் எண்ணாமல்,
பெத்தவர்கள் நீங்கள் அல்ல, என் தகப்பனும் தன் பெண்ணாள் அசோதையிடம்,
வைத்து உந்தன் பெண்சிசுவைக் கொண்டு கொலை செய்ய வானில்ப் பறந்திடவே,

ஏடு எண் 88



வளர்ந்தேன் நான் உங்களிடம், எந்தெந்த நாளும் மாறாத முத்தி யுண்டாம்,
தளைந்து[298] இருப்பீர் போங்கள் என, நந்தகோன் மற்றோர் தாய் இழந்த பிள்ளைகள் போல்,
அய்யனே, செஞ்சுடரே, அரனே, திரிபுரனே, மெய்யனே, கங்கையணி விமலா, பரம் பொருளே,
மகன் என்று நம்பி வளர்த்தேன் இதுவரையும், அகம் அதில் நான் சென்றால் சோதை அழுவாளே,
அய்யோ நானென்ன செய்வேன், அன்பாய் வளர்த்த கண்ணா, பொய்யா உனை வளர்த்தேன், போக விட்டாய் நட்டாத்தில்[299],
நன்புற்று உன்னை வளர்த்தேன், எங்கள்தனை[300] விலக்க நியாமோ என்று அழுதான்,

---

[297] யனவோர் = அனைவரும்
[298] தளைந்து = பிணைந்து, ஒன்றாக, கட்டுப்பட்டு, பிரிக்கமுடியாமல் சேர்ந்து,
[299] நட்டாத்தில் = நட்டாற்றில் (ஆற்றின் நடுவே)
[300] எங்கள்தனை = எங்களை



அன்பு உகந்து அங்கு எம்பெருமான், அண்ணர் வருவார் அனைவரையும் காத்திடுவார்,
நானொரு காலத்தில் வந்து உங்களைக் காண்பேன், நடங்கள் உங்கள் ஊர்க்கு எனவே,
போனார்கள் ஆயர் எல்லாம், வசுதேவரண்டை[301] புண்ணியர்கள் வாழும் அந்நாள்,
வாத்தி[302] இடத்தில் இருவர் சகல கலையும் வாசித்துத் தேர்ந்ததன் பின்,
பேர்த்தினார் பாட்டனையும், வடமதுரை நாட்டைப் பொன் மகுடம் சூட்டி வைத்தார்,
சாதகமாய்த் தந்தையிடம் காறுபார்[303], மற்ற சகலமும் நீர் பாரும் என்று,

ஏடு எண் 89



வேதமுறைப்படியே வித்தை எல்லாம் கற்று, விஞ்சை கற்றோர் யார் எனவே,
வடக்கே வெகுதூரம் பிராமண சன்யாசி மகா பெரிய விஞ்சை முனி,
இடத்தினில்ச் சென்றே, இருவர் பாதம் பணிந்து, ஏழைகள் போல் ஏவல் செய்து,
தஞ்சம் என்றே இங்கு வந்தோம், அடியேன்களுக்கு விஞ்சை[304] மந்திரம் ஓதும் என்றார்,

---

[301] வசுதேவரண்டை = வசுதேவர அண்டி, வசுதேவருடன்,

[302] வாத்தி = வாத்தியார், ஆசிரியர்

[303] காறுபார் = நாட்டைக் காத்துக் கொள் (காறு = காப்பாற்று, பார் = நாடு)

[304] விஞ்சை மந்திரம் = முன்னாளில் இறந்தவர்களை இந்நாளில் உயிருடன் கொண்டுவந்து சேர்க்கும் மந்திரம். (பரப்பிரமத்தைப் பற்றின ஞானம்). (1) முன்னாளில் கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பெற்ற ஆசிரியரின் மகனை, விஞ்சை மந்திரம் கற்ற கண்ணனும் பலராமனும் மீண்டும் உயிருடன் கொண்டுவந்தனர். (2) முன்னாளில் ஏழுவயதில் இறந்து விட்ட பூம்பாவை என்ற பெண்ணைத் திருஞானசம்பந்தர் உயிரோடு பன்னிரெண்டு வயதான பெண்ணாக உயிர்ப்பித்தார். (3) திருப்புக்கொளியூர் என்ற திருத்தலத்தில் சிறுவன் ஒருவனை முதலை வாயில் போட்டு விழுங்கி விட்டது. பின்னாளில் இத் திருத்தலம் வந்த சுந்தரர் திருப்பதிகம் அருளி அந்தச் சிறுவனை உயிருடன் மீட்டெடுத்தார்.

வஞ்ச கண்ணன் ராமனுமாய்[305], ஒருவாரந் தன்னில் வாய்த்த விஞ்சை கற்று அறிந்தார்,
மாயவனும் ராமனுமாய்ப் பழுதரவே கற்று மனமகிழ்ச்சியாகவேதான்,



தூய முனியைப் பணிந்து, வருசை[306] என்ன வேணும் சொல்லும் ஐயா, தாறோம்[307] என்றார்,
மா தவத்தோன் மெய் மகிழ்ந்து, என் மனையாளைக் கேட்டுவாரேன் என்றே நடந்து,
கோதையிடம், பூரணமாய் நம்மிடத்தில் வந்த குழந்தைகளைப் பார்த்த அளவில்
ஈசனோடு கேசவனோ, இந்திரரோ, வானவரோ, தேசம் எல்லாம் காக்க வந்த தெய்வமோ நான் அறியேன்,
மட்டில்லா விஞ்சைதனை வாசிப்பதற்கும் வருஷம் ஒரு நூறு செல்லும்,
எட்டு நாளில்ப் படித்தார், உமக்கென்ன வேணும் அதை இன்புற்றுக் கேளும் என்றார்,

ஏடு எண் 90



குடை[308] என்ன கேட்போம் என்று மனைவியிடங் கேட்கக், கொம்பனையாள் ஏது சொல்வாள்,
கடைநாளில் நாமொரு நாள் மகஷ்த்தான[309] தீர்த்தம் கனிந்து ஆட, மைந்தன் அங்கே
கடலில் இறந்தவனைத் தரவேணும் என்று கணவரே கேளும் என்றாள்,
மடவாள் இது உரைக்க, மாமுனியுங் கேட்டு மாயனிடத்து ஓடி வந்து,
உல்லாசமாகவேதான் மனையாள் உரைத்த உண்மை தனையே மொழிய,
சல்லாபமாய் மாயன் தருகிறோம் என்று சற்குணத்தோடே வணங்கி,

---

[305] ராமன் = பலராமன்
[306] வருசை = வரிசை, சீர்வரிசை, தட்சணை
[307] தாறோம் = தருகிறோம்
[308] குடை = கொடை, சன்மானம்,
[309] மகஷ்த்தான = மகத்தான, சிறப்புமிக்க,



வடமதுரை தன்னில் வந்து, தமையனுந் தம்பியும் வச்சிர மணித் தேர் ஏறி,
கடலோரம் வந்து நின்று, சமுத்திர ராசனைக் கருத்தில் நினைந்திடவே,
நினைந்தவுடன் ஆழிமன்னன்[310] அஞ்சி ஒடுங்கி, நிமிஷத்தில் வந்து கண்டு,
அனைத்து உயிர்க்கும்தானவனே, நினைத்ததென்ன என்று அடிபணிந்து போற்றி நிற்க,
எங்கள் குரு புத்திரனும் முன் மகஷ்த்தானம் ஆடி இறந்தானாம் இக்கடலில்,
பங்கமில்லா வாரி எங்கும் ஆராய்ந்து தேடிப் பார்த்து அழைத்து வாவெனவே,

ஏடு எண் 91



குதித்தான் கடலரசன், எழு கடலுந் தேடிக் குழந்தை தனைக் காணாமல்,
மதித்தாம் இங்கு இல்லை என்று நடுக் கடல் மத்தியில் மாபாவி அங்கு ஒருவன்,
மேரு மலையைப் போலே ராச்சதனும் தூங்க, விரி மார்பைதான் கிழித்து,
நீரரசன்[311] பார்த்திடவே, வெண்ணிறமாய் அங்கே நெஞ்சில் ஒரு சங்கு இருக்க,
வலை எடுத்து அங்கு ஓடிவந்து கண்ணனிடம் ஈய்ந்து, மைந்தனைக் காணோம் எனவே,
மழை தடுத்த கேசவனார் எமனை நினைத்து மணிவாயில் வைத்து ஊத,

தொனி மிகுந்த சங்கோசை எமதர்மன் கேட்டுத் தூயோன் முன் வந்து இரைஞ்சி,
அநியாயம் என்ன செய்தேன், அறிவித்து என்னையாள் ஆதிமகாமூலம் என்ன,

[310] ஆழிமன்னன் = கடல் அரசன்
[311] நீரரசன் = நீர் அரசன், கடல் அரசன்



எந்தன் குரு புதல்வன் முன் மகஷ்த்தானம் ஆடி இறந்தவனை இச்சனமே
தந்திடுவாய் என்று உரைக்க, ஆகட்டும் என்று சண்டன் பதிக்கு ஏகி,
கொண்டு வந்து பாலகனைக் கண்ணனிடம் தந்து கும்பிட்டுத்தான் போற்றி,
அண்டி நின்ற காலனுக்குக் கண்ணன் விடைகொடுக்க, அவன் பதிக்கு அங்கே ஏகிடவே,

ஏடு எண் 92



செல்வனைத் தோள் மீதில் வைத்துச் சுருக்கில் ரதம் நடத்திச், செய முனிவன்[312] முன்பு விட,
நல்லறிவோன் விஞ்சை முனி ஞான விளியாலே நாரணர்தாம் என்று அறிந்து,
வல்லவர்களே இனி நான் உங்களுக்கு என்ன வரிசை கொடுப்பேன் பதிலாய்,
செல்லுவீர் சுவாமி என்றான், குருவை வணங்கிச் சேர்ந்தார் வடமதுரை,
கஞ்சனுட தேவியர்கள் மகத தேசம் ஆளுங் கனத் தசராசன் தன்மக்கள்
அஞ்சி வந்து தந்தையிடம் முட்டிப் புலம்பி அழுது முறையிட்டு உரைப்பார்,



கண்ணன் என்று பேர், அவனாம் ஆயர் மனை தோறும் வெண்ணை திருடி உண்போன்,
எண்ணியவன் பாராமல் எங்களுடைய இறையோனைக் கொன்று விட்டான்,

[312] செய முனிவன் = கண்ணனுக்கும் பலராமனுக்கும் விஞ்சை மந்திரம் கற்றுக் கொடுத்த முனிவர்.

தந்தையே நாம் என்ன செய்வோம், என்று புலம்பி அழத், தளத்தைப்[313] பெருக்கும் என்றான்,
பந்தையங்கள் கூறியவன் இருபத்தோர் அக்ரோணி படைகள் முழுதும் திரட்டி,
கஞ்சன் பழிவாங்க என்று, கரிபரிதேர் சூழக் கவிந்தான்[314] மதுரைதனை[315],
நஞ்சரவில் [316] ஆடி நின்றோன் போர்க்கோலம் கொண்டு நான்கு வகைச் சேனையொடு,

ஏடு எண் 93



சத்த பலராமனொடு தேர் குதிரை தந்தி[317] தளங்கள் அணி வகுத்து,
வெற்றி பெற்ற ஆயுதங்கள் சக்கரமும் வில்லும் விதிவிதமாய்த்தான் எடுத்து,
வச்சிரமணித் தேர் ஏறிக் கண்ணன் இராமனும் வளைந்து சறாசந்தினுடன்[318]
கச்சியைப்[319] பார்ப்போம் எனவே இருவகைச் சேனைகளும் கைகலந்து சண்டை செய்தார்,
கைகள் அற்று வீழ்ந்தவரும், கால்கள் அற்று வீழ்ந்தவரும், மெய்கள் அற்று வீழ்ந்தவரும், கண்ணனுக்கு அஞ்சி விருது போட்டு ஓடுவோரும்,
இந்தப்படியாய் இருவர் படையும் சேர்ந்து ஐந்து நாள் மட்டும் அடங்காத போர் புரிந்தார்



[313] தளம் = போர்ப் படை
[314] கவிந்தான் = சூழ்ந்தான், முற்றுகையிட்டான்,
[315] மதுரை = வடமதுரை, மதுராபுரி
[316] நஞ்சு அரவில்
[317] தந்தி = தந்தம், யானை
[318] சறாசந்தினுடன் = சராசந்தனுடன், (சராசந்தன் என்பவன் கிரிவிரசநகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசன்).
[319] கச்சி = கட்சி, அரசியல்கட்சி, (ஒருவனைத் தலைவனாக ஏற்றுக் கொண்ட கூட்டம்)

குன்றெடுத்த தோளான்[320], பலராமன் தன்னைக் கூப்பிட்டு நற்குணமாய்,
இன்று உனக்கு ஓர் வார்த்தை சொல்வேன், தந்தை தாய் ஆயர் எல்லோரையும் காப்பாய்,
தோற்றவன் போல் ஓடுகிறேன், சராசந்தன் என்னைத் துரத்துவான் தேசமெங்கும்,
மாற்றவன் தன் சேனை எல்லாம் ஓர் நொடியில் கொன்று, மாநகரைக் காப்பதன்றி
வளர்த்துஎடுத்தார் தங்களையும் சோர்வரக் காத்து, வாழ் நகரை நீங்கி, அப்பால்
தலைத் தாய்தந்தையுடன் எந்தன் இருப்பிடம் தனக்கு வருவீர் காண்போம்.

ஏடு எண் 94



போரேன்[321] அண்ணா என்று உரைக்கப், பலபத்திரர்க்குப்[322] பூர்வக் கியானம்[323] தெரிந்து,
நாரணனே, என் துணைவா, நீ நாட்டத்தில்[324] உற்றபடி நான் அறிவேன் இப்போது,
பூரணனே போ எனவே, ஆத்தாதவன்[325] போலப் புறங்காட்டி ஓடல் உற்றான்,
வீருடனே பின் தொடர்ந்து, சராசந்த ராசன் விரட்டினான் சீமை யெங்கும்,
வேங்கையை நாய் பற்றுதல் போல்ச், சூது அறியா மூடன் விரட்டியே பின் தெரிய.
ஓங்கு பலராமன் அங்கே, எதிரி தளத்தை[326] ஓர் நொடியிலே துரத்தி,

[320] குன்றெடுத்த தோளான் = குன்றைக் கையில் தூக்கிய பலம் மிகுந்த தோளை உடைய கண்ணன்.
[321] போரேன் = போகிறேன்
[322] பலபத்திரர்க்கு = பலராமர்க்கு
[323] பூர்வக் கியானம் = பூர்வ ஞானம் (ஆதிசேசனே பலராமர், மகாவிஷ்ணுவே கண்ணன் என்ற ஞானம்)
[324] நாட்டம் = விருப்பம்
[325] ஆத்தாதவன் = ஆற்றாதவன் = ஆற்றல் அற்றவன், செயல் அற்றவன்,
[326] தளத்தை = படையை



தேவகிக்கும் தந்தையர்க்கும் கண்ணன் செயசூஷ்த்திரம்[327] செப்பலுற்றான். கற்பனையாய்
பாவகமாய்க்[328] கண்ணன் கபடம் எண்ணிச் சென்றான், பதையாது[329] இருங்கள் என்று,
தாமோதர முகுந்தன் பயந்தவனைப் போலே தாண்டிக் குதித்தான் கடலில்,
பூமாரி தேவர் பெய்யத், திருப்பாற் கடலில்ப் போய்ப் படுத்தார் பாம்பணை மேல்,
தேடினான் வாரி[330] எங்கும் சராசந்த ராசன், திருமாலைக் காணோமல்,
வாடினான் மெய் பதைத்தான், வடமதுரை நோக்கி வலு வேகத் தோடு அவன்

ஏடு எண் 95



ஓடினான், போர்க் களத்தில் நிறைந்து நின்ற சேனை ஒருவரையும் காணாமல்,
ஆடிப் பரிதவித்து, ஏமாந்தார் போல அதிக வியாகுலமாய்[331],
தளன்று[332], மதி மயங்கிச், சராசந்தனுக்குச் சஞ்சலங்கள் உண்டாகி,
அளன்று நெடுமூச்சு எரிந்து, மகத தேசம்[333] சென்று அரசு செய்தான் துக்கமுடன்,
திருப்பாற்கடலை விட்டு மாயாவிநோதன் சிறந்த புவியில் வந்து,
இருப்பதற்கு ஓர் பட்டணந்தான் உண்டாக்க என்று இருதயத்திலே நினைந்து,

---

[327] செயசூஷ்த்திரம் = ஜெய சூத்திரம், வெற்றிக்கான ரகசியத் திட்டம்
[328] பாவகம் = பாவனை, நடிப்பு
[329] பதையாது = பதைபதைக்காது, பதட்டப்படாமல்
[330] வாரி = கடல்
[331] வியாகுலம் = வருத்தம், துக்கம், கவலை, மயக்கம்,கலக்கம்
[332] தளன்று = உடலும் மனமும் தளர்ச்சி அடைந்து,
[333] மகத்தேசம் = மக தேசம், மக நாடு



விருப்பமுடன் விஸ்வகர்மன் தன்னை நினைக்க விரைவில் வந்தே போற்றி நின்றான்,
மறுப்பு ஒன்றில்லாத நகர் கொத்தளம், கோட்டை மாடமொடு மாளிகையும்,
நான்கு விதச் சேனையொடு, வற்றாத செல்வமுள்ள நகரைப் படையும்[334] என்றார்.
பாங்குடனே தெய்வ தச்சன், துவராபுரியைப் படைத்தான் ஒரு கணத்தில்,
குருநாடு அத்திபுரம்[335] என்றோர் நகரம் குடதிசையில்[336] உண்டாக்கி,
கருமி திதராட்டிதனை[337] அரசாளச் செய்து, பிர்ம கபாலம்[338] நிறைய வென்று,

ஏடு எண் 96



சூஷ்த்திர[339] அவதாரி பதினாயிரம் பெண்களைச் சுகமாய் மணமுடித்து,
நேத்திரத்துக்கு இணையாய் ருக்குமணி தேவியுடன் நிபமாதர் எண்மர்களும்[340]

---

[334] படையும் = உருவாக்கு
[335] அத்திபுரம் = அஸ்த்தினாபுரம்
[336] குடதிசையில் = மேற்குத் திசையில்
[337] திருதராட்டிணன் தன்னை
[338] பிர்ம கபாலம் = பிரம்மகபாலம், பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைச் சிவன் கொய்துவிட்டார். அந்தத் தலையானது சிவனின் கையில் ஒட்டிக்கொண்டது. இவ்வாறு சிவனது கையில் ஒட்டிக் கொண்ட பிரமனது மண்டையோட்டிற்குப் பிரம்மகபாலம் என்று பெயர். இந்த மண்டையோட்டையே பிச்சைப் பாத்திரமாக ஏந்தி ஈசன் பிச்சையெடுக்கும் நிலை ஏற்பட்டது. போடப்படும் உணவையெல்லாம் கபாலமே விழுங்கிவிடும்.
[339] சூஷ்த்திர = சூத்திரம், விதி,
[340] நிப மாந்தர் எண்மர் = ருக்மணி, சத்தியபாமா, ஜாம்பவதி, நக்னசித்தி, காளிந்தி, மித்திரவிந்தை, இலக்குமணை, பத்திரை என்ற எட்டுப்பேர்.

பதியில்ப் பெருக்கம் அதாய், எண்ணிக்கையற்ற பாலர்கள் தன்னைச் சூழ,
நிதி பெரு செங்கோல் செலுத்தி, ஆதிமகாமூலம் நேர்மையுடன் வாழும் அந்நாள்,
பஞ்சவர்க்கும்[341] நூற்றுவர்க்கும்[342] எந்நாளும் நீங்காப் பகைகளை உண்டாக்க என்று,
வஞ்சகச் சூதாட வைத்துப், பஞ்சவர்கள் தன்னை வனவாசம் போக்கிவித்து[343]



தூது நடந்தாய், துணிவு சொல்லிப் பஞ்சவர்க்கு வாது மிக விளைத்தாய், வலுத்து சண்டை மூட்டி விட்டாய்,
பார்த்தனுக்குத் தேரூர்ந்தாய், பதினெட்டு நாளைப் படைப்போர் தனை முடித்தாய்,
வாய்த்த திரியோதனனும் தம்பியரும் மற்ற மன்னரை எல்லாம் வதைத்து,
தரும மகாராசனுக்கு அஸ்த்தினாபுரியைக் கனகமுடி சூட்டி வைத்தாய்,
கருமேக நீல வர்ணா, அரசு செய்யும் நாளில்க் கலியன்[344] வாரான்[345] எனவே
மனதிற் கபடமதாய், இருப்பு உலக்கையாலே மைந்தரைச் சாகக் கொடுத்தாய்[346],

---

[341] பஞ்சவர் = பஞ்ச பாண்டவர்
[342] நூற்றுவர் = நூறு துரியோதனர்கள்
[343] போக்கிவித்து = போகவிட்டு, அனுப்பிவிட்டு
[344] கலியன் = கலி காலம், நான்காம் யுகம், (தமிழர் கலியாண்டு 5119 = கி.பி.2019),
[345] வாரான் = வருகிறான், கலிகாலம் வருகிறது,
[346] குருச்சேத்திரப் போருக்குப்பின் 35 ஆண்டுகள் கடந்த பின் ஒரு நாள் யாதவகுல இளைஞர்களில் சிலர் சாம்பனுக்கு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் வேடமிட்டு, பிரபாச நகரில் தவக்கோலத்தில் இருந்த சப்த ரிஷிகளிடம் அழைத்துச் சென்று, இந்தக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு என்ன குழந்தை பிறக்கும் என வேடிக்கையாக கேட்டனர். இளைஞர்களின் கபட நாடகத்தை அறிந்த முனிவர்கள், இவள் உங்கள் யாதவ குலத்தையே அழிக்கப்போகும் இரும்பு உலக்கையை பெற்றெடுக்கப் போகிறாள் என சாபம் இட்டனர். முனிவர்கள் கூறியபடியே சாம்பனுக்கு உடனே இரும்பு உலக்கை பிறந்தது. இதனை அறிந்த யாதவகுல அரசன் உக்கிரசேனன், இரும்பு உலக்கையை பொடிப்பொடியாக அரைத்து கடலில் கரைக்க உத்திரவிட்டார். சில காலம் கழித்துக் கடல் அலைகளால் பிரபாச பட்டினக் கடற்கரையில் ஒதுங்கிய உலக்கையின் இரும்புத்தூள்கள், மிக உறுதியான நீண்ட கோரைப் புற்களாக வளர்ந்தன. ஒரு முறை பிரபாச பட்டினத்திற்குச் சென்ற யாதவர்கள் மதியை மயக்கும் போதையைத் தரும் மைரேயம் என்ற மதுவை அளவுக்கு மீறிப் பருகியதான் மதி இழந்து ஒருவரையொருவர் இரும்புத் தடி போன்று வளர்ந்திருந்த வச்சிராயுதத்திற்கு நிகரான கோரைப் புற்களால் தாக்கிக் கொண்டு, சாம்பன் உட்பட அனைவரும் முற்றிலும் அழிந்தனர். யாதவ வம்சமே பூண்டோடு அழிந்தது.

கண்ணன் வைகுண்டம் அடைந்தது

ஏடு எண் 97



தனது பஞ்சபாண்டவற்கு கலியில் நடக்கும் சஞ்சலம் எல்லாம் உரைத்து,
மாயவனும் வஞ்சகமாய்த் துவராபுரிக்கு வடமேற்கு மூலையிலே
நேயமுள்ள ஆல்[347] அடியில் வைகுண்டஞ் சேர நித்திரை செய்தாய், சூதாய்
வாலியும் ஓர் வேடனைப் போல் ராமாவதாரத்தில் வதைத்த பலி வாங்கவென்று,
தாலம் அதிலே பிறந்து, மான்வேட்டை யாடத் தான் நடந்தான் வில்லெடுத்து,
இருப்புக் கணை பூட்டி, ஆரணியஞ் செல்ல எம்பெருமாள் மாயகை அதால்,



வெரித்து ஓடும் மானது போல்க் கண்ணுக்குத் தோற்ற விரட்டினான் சோலை எங்கும்,
விண்டலஞ் சேர் ஆலடியில் அட்டணைக்கால்[348] போட்டு விட்டுணு[349] அங்கே நித்திரை செய்ய,
கண்டான், பெண் மானெனவே ஒளிவிலிருந்து, மான்காது எனவே காலில் எய்தான்,
பதையாமல் மாண்டது என்று ஓடி வந்து பார்க்கப் பச்சைமால் அங்கிருக்க,
அதைப் பார்த்து வில்வேடன் அய்யோகோ என்று ஆடிப் பரந்து அலறி,
கதறினான் வில்வேடன், கண்ணனைப் பார்த்துக் கை கால் மெய் சோர நின்று,

ஏடு எண் 98

---

[347] ஆல் = ஆலமரம்

[348] அட்டணைக்கால் போட்டு = ஒரு கால் மேல் மற்றொரு காலைப் போட்டு

[349] விட்டுணு = விஷ்ணு, திருமால்,



உதரி மதி மயங்கித் தைத்த கணையை உரமாகவே பிடுங்கி,
விதியோ நான் என் செய்வேன், வேட்டை செய்ய வந்த வேளை பிசகோ[350] எனவே,
பதுமநாபன் பதத்தில் ரத்தப் பிரவாகம் பார்தனிலே பீறிடவே,
கோபால போர் ஏரே, அரிகரி, மாதவா, கோவிந்தா, அச்சுதனே,
மாபாவி ஆனேனே, சுவாமி, நீர் இங்கு உற்ற வகை ஏது எனக் கேட்க,
உத்தமனே வில்வேடா குற்றம் உன்மேல் இல்லை, ஊழ்வினைச் சாபம் இது[351],



அத்திபுரந்தனில்ப்[352] போய்த் தருமர்க்கு இளைய அருச்சுணனும் வீமனையும்
வெற்றிபுரி வீரர்களை இங்கு வரச் சொல்லி உந்தன் விடுதி சேர் என்று அனுப்ப,
பத்தியுள்ள பாண்டவர்க்கு வேடன் போய்ச் சொல்லப், பதறி அவர் ஓடி வந்து,
அண்டி நின்று தூக்கிடவே, அவர்கள் பலம் ஆயுதத்தின் அது வழியாய் வாங்கியே மால்
மண்டலத்தின் ஆசை விட்டு நான் போரேன், நீங்கள் வைகுண்டம் வாங்கள் என்று.
நாடி நின்று வானோர்கள் தேவா முனிவர் நன்மலரால் மாரி பெய்ய,

ஏடு எண் 99

[350] பிசகோ = தவறோ

[351] இராம அவதாரத்திலே வாலியை நான் மறைந்திருந்து அம்பு எய்து கொன்றேன். வாலியான நீ, இந்தப் பிறவியில் வேடனாகப் பிறந்து மறைந்திருந்து என் மீது அம்பு எய்துள்ளாய். இது ஊழ்வினைச் சாபம் என்றார்.

[352] அத்திபுரந்தனில் = அஸ்தினாபுரம் தனில்



கூடு விட்டுத், தேர் ஏறி, வைகுண்டம் சேர்ந்து கோவிந்தன் வீற்றிருந்தார்,
சடத்தை[353] எடுத்து அடக்கி, வீமன்[354] விசையன்[355] செய் சடங்கு பல முடித்து,
நடக்கும் குறை[356] முழுதும் தருமர்க்கு உரைத்து நாடு ஆண்டார் மங்களமாய்.
வடக்குச் சமுத்திரத்தில்[357] வரத வெங்கடேசன் வடவாளின்[358] மேல் இருந்து,
திடமுடனே சங்கு எடுத்துப் பஞ்சவர் சகாயன் செம்பவள வாயில் வைத்து
ஊதினார், செந்திருமால் வெண்சங்கின் ஓசை உலகு ஏழும் கிடுகிடு என,



நீதியுள்ள சங்கோசை அண்டர் எல்லாம் கேட்டு நிமலனை வந்தே பணிந்து,
அனந்தன் குடைப் பிடிக்க வைகுண்ட வாசகனை அனைவோரும் போற்றி நிற்க,
கனந்[359] தங்கும் வாணி[360] வந்து பாதம்பிடிக்கக், கருணைமால் கண் துயின்றார்.
புவிஅளந்த மாமூலம் அம்சந்தனில் தோன்றிப் பூலோகந் தன்னில் வந்து,

---

[353] சடம் = ஜடம், உயிற்ற உடல்
[354] வீமன் = பீமன்
[355] விசையன் = அர்ச்சுணன்
[356] குறை = மீதம், எஞ்சியன
[357] வடக்குச் சமுத்திரத்தில் = பாரதத்தின் மூன்று திசைகளிலும் சமுத்திரங்கள் உள்ளன. ஆனால் வடதிசையில் சக்கரவாள மலையாகிய இமயமலைதான் உள்ளது. எனவே வடக்குச் சமுத்திரம் என்பது இமயமலையில் உள்ள மானசரோவர் தீர்த்தத்தைக் குறிக்கும். ***பரந்தாமன் பள்ளிகொண்டுள்ள திருப்பாற்கடலைக் குறிக்கும்,***
[358] வடவாள் = வடக்கேயுள்ள சக்கரவாளம், இமயமலை.
[359] கனம் = கனக தாமரை,
[360] கனந்தங்கும் வாணி = இலக்குமி, மகாலெட்சுமி

தவமிகுந்த காஞ்சிபுரம் நூற்றெட்டுத் திருப்பதி தலங்கள் எல்லாம் வீற்றிருந்து,
நதியில் உயர் காவேரி ஸ்ரீரெங்கம் தன்னில் ராகவன் வந்தே நிறைந்து.

கஷ்டம் எல்லாம் விட்டு அகலக், கருப்பணதாசன் கவிமொழிந்து போற்றி செய்ய,
கற்றோர் படித்தோரும் சுவாமி கதையைக் கருத்து உகந்து கேட் போரும்,
வற்றாத செல்வமுடன் மதிகதிர் உள்ள மட்டும் வாழ்ந்து இருக்க வாழியதே.

சுபம்.

இந்த வர்ணிப்பு எழுதினது ***திருப்பூவணம்***[361] இருந்து ***பூஞ்சுத்தியில்***[362] வந்திருந்த ***வீரபத்திரன் சேருவை*** மகன் ***கருப்பணன் சேருவை*** கையெழுத்து பிரமோதூத[363] வருடம் ஆவணி மாதம் 21ஆம் நாள் எழுதி முடித்தது உ

•••••

ஓலைச் சுவடிகளை வழங்கியவர்

வழிபாட்டில் வைத்திருந்த இந்த ஓலைச் சுவடிகளை வழங்கியவர் - சிவகங்கை மாவட்டம் இடையமேலூர் அருகே உள்ள கண்டாங்கிபட்டி கிராமத்தைச் சேர்ந்த ***திரு. நாராயணன் கோனார் அவர்கள்***.

இந்த ஓலைச்சுவடி ஏடுகளை நகல் எடுத்து, வாசித்து, எழுதித் தட்டச்சு செய்தவர் - மாரநாடு நா.ரா.கி. கிருஷ்ணன் (காவல்துறை) அவர்களது மகன், ***திருப்பூவணம்*** இருந்து காரைக்குடி ***கோட்டையூரில்*** வசித்திருக்கும், ***காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்.***

கண்ணன் திருவருளும், அழகர்மலை அருள்மிகு கள்ளழகர் திருவருளும், அருள்மிகு பதினெட்டாம்படிக் கருப்பணசாமியின் திருவருளும் நம் அனைவருக்கும் ஆகுக.

அன்பன்

காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்,
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி)
28 அ, குருநாதர்கோயில்தெரு, கோட்டையூர் - 630 106.
Cell Phone : 824 826 6418, WhatsApp : 9443501912, FaceBooK : kalairajan.krishnan, email : kalairajan26@gmail.com

ஆணி 6 (23.0/8.2019) வெள்ளிக்கிழமை.

---

[361] மதுரையில் இருந்து இராமேச்சுரம் செல்லும் வழியில் மதுரையிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது திருப்பூவணம் (திருப்புவனம்).

[362] திருப்பூவணத்தி லிருந்து திருவாதவூர் - மேலூர் செல்லும் வழியில் திருப்பூவணத்திலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது பூஞ்சுத்தி.

[363] பிரமோதூத = கி.பி.1690

பின்னிணைப்பு

நூலாசிரியர் குறிப்பு

குல தெய்வம் – அருள்மிகு பூரணை புஷ்கலை உடனாய புலிக்கரை ஐயனார், கண்டாங்கிபட்டி, தமராக்கி.

காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,

28A, குருநாதர்கோயில் தெரு, கோட்டையூர் - 630 106

தொடர்பு எண் - 94435 01912

மின்னஞ்சல் - kalairajan26@gmail.com

பிறந்த நாள் - 26.10.1957

பிறந்த ஊர் – காளையார்கோயில், சிவகங்கை மாவட்டம்

வளர்ந்த ஊர் – திருப்பூவணம், சிவகங்கை மாவட்டம்

முன்னோர் புலம் பெயர்ந்த ஊர் – மாரநாடு கிராமம், சிவகங்கை மாவட்டம்.

முன்னோர் புலம் பெயர்ந்த நாடு – மயன்மார் (பர்மா), யங்கோன் (ரங்கோன்) மற்றும் யோராஞ்சி கிராமம் (தட்டோன் மாவட்டம் இன்னின் (Yinnyein) கிராமம் அருகில்),

பூர்வீகம் – தமராக்கி, சிவகங்கை மாவட்டம்.

பணிவிபரம் - துணைப்பதிவாளர், (விருப்பப் பணிஓய்வு நாள் 30.04.2015), அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி – 630003

காசி பாதயாத்திரை

வலையபட்டி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற,

(1) இராமேச்சுரம் காசி பாதயாத்திரை (காசிஸ்ரீ பட்டம்). 24.05.2014 அன்று இராமேச்சுரம் கோயிலில் இருந்து புறப்பட்டு 12.09.2014 அன்று காசி விசுவநாதர் கோயில் வழிபாடு. 110 நாட்கள் நடைப் பயணம்.

(2) இராமேச்சுரத்தில் 20.04.2015 அன்று புறப்பட்டு காசி பாதயாத்திரை சென்றனர். இவர்களுடன் 19.07.2015 அன்று நாக்பூகரில் சேர்ந்து கொண்டு காசி பாதயாத்திரை.
25.08.2015 அன்று காசியை அடைந்து விசுவநாதர் கோயில் வழிபாடு. 38 நாட்கள் நடைப் பயணம்.

அறுபடைவீடு பாதயாத்திரை

வலையபட்டி காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரை.
பிள்ளையார்பட்டியிலிருந்து புறப்பட்டு, பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருச்செந்தூர் அறுபடைவீடு பாதயாத்திரை –

53 நாட்கள் (07.04.2016 முதல் 30.05.2016 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்,

60 நாட்கள் (08.06.2017 முதல் 06.08.2017 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்.

மதுரை மானாமதுரை ஆன்மிகப் பாத யாத்திரைகள்

(1) மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் தலைமையில், மதுரையிலிருந்து வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை 3 நாட்கள் (மாசி பூரணை) 2014ஆம் ஆண்டு.
(2) மதுரையிலிருந்து வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை 3 நாட்கள் (மாசி பூரணை) 2015ஆம் ஆண்டு

கல்வித் தகுதி

B.Sc. (Mathematics), மதுரை தியாகராசர் கல்லூரி,

M.A., (Tamil), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

M.Phil., (Tamil), திருப்பூவணநாதர் கோயில் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.

Ph.D., (Tamil), திருப்பூவணப் புராணம் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.

ஆன்மிகப் பணி

1) திருப்பூவணம் கோயிலில் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் இணைச்செயலாளர்,

2) திருப்பூவணம் ஆடித்தபசு மண்டபம் திருப்பணி ஒருங்கிணைப்பாளர்,

3) சக்குடி கோயில் புனர்நிர்மாணம் துவக்கிடத் தூண்டுதலான பணிகள் செய்தமை.

எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்

1) திருப்பூவணக் காசி - திருப்பூவணம் திருக்கோயில் அமைப்பும் சிறப்பும் மற்றும் திருக்கோயில் தொடர்பான பாடல்கள், திருப்பூவணமானது எவ்வாறு காசியிலும் சிறந்தது என்பதற்கான விளக்கங்கள் உள்ளன. இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 24-09-2007 அன்று திருப்பூவணம் கோயிலில் தவத்திரு குன்றக்குடிப் பொன்னம்பல அடிகளார் அவர்களால், மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள் முன்னிலையில் வெளியிடப்பெற்றது.

2) திருப்பூவணப் புராணம் - 1620 ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்துப் பாடப் பெற்ற திருப்பூவணப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் நாள் (15.03.2009) அன்று திருப்பூவணம் கோயிலில் மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்களால் வெளியிடப் பெற்றது). ஐயா பட்டமுத்து அவர்கள் முதல்பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்.

இந்நூலாசிரியரின் இணைய நண்பர் திரு.சீறினிவாசன் அவர்களது பெருமுயற்சியால் http://www.pratilipi.com/munaivar-k-kaalaiyarasan/thirupoovana-puraanam என்ற இணையதளத்தில் .திருப்பூவணப் புராணம் வெளியிடப்பெற்றுள்ளது (இலவசமாக)

3) பொழில் திகழும் பூவணம்- திருப்பூவணம் தொடர்பான அனைத்து விபரங்களையும் தொகுத்து திருப்பூவணம் கோட்டை வழக்கறிஞரும், பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் மேனாள் செயலாளருமான திரு.சண்முகநாதன் அவர்களது பொருளுதவியுடன் இந்நூல் சிறு கையேடாக வெளியிடப் பெற்றுள்ளது.

4) காளையார்கோயில் தலபுராணம் (கதைச்சுருக்கம்). முனைவர் நா.வள்ளி அவர்களும், இவரது முனைவர் பட்ட ஆய்வாளரான முனைவர் கி.காளைராசன் அவர்களும் காளையார்கோயில் புராணத்திற்கு உரைச்சுருக்கம் எழுதி காளையார்கோயில் தலபுராணம் என்ற பெயரில் நூலாக்கம் செய்து, பங்குனி 13 (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பெற்றது. தேவகோட்டை ஜமீன்தார் அள.அரு.சோம.நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்கள் மற்றும் ஸ்ரீகாசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் முன்னிலை வகித்தனர். தேவகோட்டை இலக்கியமேகம் ஸ்ரீனிவாசன் அவர்கள் நூலை அறிமுகம் செய்தார். ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளைத் தலைவர் தேவகோட்டை பேராசிரியர் இராம. திண்ணப்பன் அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். காளையார்கோயில் பரம்பரை ஸ்தானிகம் திரு. காளீசுவர குருக்கள் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து தேவகோட்டை உ.மு.பழ.ராம.பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், காசீஸ்ரீ சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களும், சென்னை உமாபதிப்பகம் திரு.இராம. லெட்சுமணன் செட்டியார் அவர்களும் மற்றும் திருக்கானப்பேர் அன்பர் குழுவின் தலைவர் பாஸ்கரன் அவர்களும், செயல்தலைவர் வெல்டிங் ஏ.கண்ணன் அவர்களும், சிவனடியார் கா. தவமணி அவர்களும், சிவகங்கை ஈசாயோகா மையம் திரு.மாயன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். திருக்கானப்பேர் சூர்யா கண்ஸ்ட்ரக்சன்ஸ் டி.என். கருணாநிதி அவர்கள் நன்றி கூறினார்.

5) எழுத்தில், பிழைத்திருத்தத்தில், அச்சில் உள்ள நூல்கள்

1. திருப்பூவண நாதருலா (மூலமும் உரையும்), 2. திருஆப்புடையார் புராணம், 3. காளையார்கோயில் புராணம் (மூலமும் உரையும்), 4) காளையார்கோயில் கல்வெட்டுகள், 5. திருவாடானைப் புராணம், 6. சூரைமாநகர் புராணம் (மூலமும் உரையும்), 7. காஞ்சிவனக் கருப்பர் கதை (ஓலைச்சுவடியில் உள்ளபடி), 8. மருதூர் அந்தாதி (ஓலைச் சுவடியில் உள்ளபடி).

ஒலிக் குறுந்தகடுகள் வெளியீடு . திருப்பூவணம் தேவாரப்பாடல்கள் அடங்கிய ஒலிக்குறுந்தகடும், திருப்பூவணப் புராணக் கதைகள் அடங்கிய குறுந்தகடும் என இரண்டு குறுந்தகடுகள் இந்நூலாசிரியரால் வெளியிடப் பெற்றுள்ளன.

திருப்பூவணப் புராணம் ஒலிப்பதிவு குறுந்தகடு வெளியிடுதல்
வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ப்ரியங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் வெளியிட
காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் நா.வள்ளி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

கட்டுரைகள்

முனைவர் கி. காளைராசன் அவர்களது படைப்புகளை ஆன்மிகம், ஆன்மிக அறிவியல் மற்றும் திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவருடைய கட்டுரைகள் தினபூமி, தினமலர், மஞ்சரி, தமிழ் மாருதம், செந்தமிழ்ச் செல்வி, ஓம்சக்தி, மெய்கண்டார், கண்ணியம் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

ஆன்மிகக் கட்டுரைகள்

1) ஐயாவிடம் சொல்லிவிட்டேன் அவர் பார்த்துக்கொள்வார் காரைக்குடி-கோட்டையூர் அருகில் உள்ள வேலங்குடி கிராமத்தில் வீற்றிருந்து அருளும் சொற்கேட்ட விநாயகரின் திருவருள் பற்றியது.

2) என்பிழை பொறுப்பாய் எம்மானே திருப்பூவணத்தில் சிவபெருமான் பார்வதி தேவிக்கு வரம் அருளியது

3) பாவம் போக்கும் பூவணம் திருப்பூவணத் திருத்தலத்தின் பெருமைகள் குறித்து எழுதப் பெற்றது.

4) சித்தர் வடிவில் சிவபெருமான் 36ஆவது திருவிளையாடற் புராணம் - சித்தர் வடிவில் சிவபெருமான் திருப்பூவணத்தில் எழுந்தருளி இரசவாதம் செய்தருளியது.

5) ஆற்றின் குறுக்கே 1008 லிங்கம் திருப்பூவணத்தில் திருக்கோயில் எதிரே ஓடும் வைகை ஆற்றில் லிங்கங்கள் புதையுண்டிருப்பது பற்றிய கட்டுரை

6) கல்லா? கடவுளா? கல்லால் ஆன வடிவங்கள் எப்படிக் கடவுள் போன்று செயல்பட முடியும் என்பதற்கான விளக்கம்

7) சாமி என்ன சாப்பிடவா செய்கிறார்? கடவுளுக்குப் படைக்கப்படுபவை அவரை எவ்வாறு சென்றடைகின்றன என்பதற்கான விளக்கம்

ஆன்மிக அறிவியல் கட்டுரைகள்

8) சிவனும் பெருமாளும் ACயும் DCயும் (இறைவடிவங்களும் மின்சாரத்தின் வடிவங்களும் ஒன்றாய் உள்ளன என்று விளக்கும் கட்டுரை)

9) ஆடல்வல்லானே அறிவியல் இறைவன் (தனி ஊசல் விதிகளுக்கு ஏற்ப ஆடல்வல்லானின் (நடராசரின்) ஆட்டம் உள்ளது என்ற விளக்கக் கட்டுரை)

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் திரு. இளங்கோ முன்னிலையில், பேராசிரியர் இராம.திண்ணப்பன் செட்டியார் அவர்களிடமிருந்து, திருப்பூவணம் பதிகங்களை ஓதுவார் திரு. முத்துக்குமார் அவர்களது குழுவினருடன் சேர்ந்து பாடிய ஒலிப்பதிவு குறுந்தகட்டைத் திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. செந்தில் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

10) விஞ்ஞானத் தொலைகாட்சிப்பெட்டியும் மெய்ஞ்ஞானக் கோயில்களும் - தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள காட்சிக் குழாயின் (Picture Tube) வடிவமும் செயலும் நடராசரின் வடிவத்துடனும் செயலுடனும் ஒத்து இருப்பதை விளக்கும் கட்டுரை.

11) மதுரைக்கு வந்த சுனாமி - பிரளயகாலத்தில் சுனாமி ஏற்பட்டு நான்கு முறை மதுரைக்கு வந்துள்ளது என்பதைத் திருவிளையாடற் புராணம் கொண்டு விளக்கும் கட்டுரை.

திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்

12) வள்ளுவரும் வாஸ்துவும் திருக்குறளின் பாயிர அதிகார அமைப்பு முறையானது வாஸ்து இலக்கணப்படி உள்ளது என்பதை விளக்கும் கட்டுரை

13) திசைதெய்வங்களைத் தொழும் திருவள்ளுவர் திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களும் திசை தெய்வங்களை வணங்கி எழுதப்பெற்றுள்ளன என்பதை விளக்கும் கட்டுரை.

14)ஆனை முகத்தானே(னோ) ஆதிபகவன் - முதற் குறளில் குறிப்பிடப்பெற்றுள்ள "ஆதிபகவன்" என்பது விநாயகப் பெருமானையே குறிக்கும் என்பது பற்றியது.

15) குறளிலும் சோதிடம் இராகு கேது இவற்றின் சோதிட அமைப்பில் ஐந்தாவது குறள் எழுதப்பட்டுள்ளது என்பதை . விளக்கும் கட்டுரை

16) திருக்குறளில் “வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர் யார்?“ என்பது பற்றிய விளக்கம்

17) குறள் கூறும் இறைவன் பத்தாவது குறளில் கூறப்பெற்றுள்ள இறைவன் அனந்த சயனப் பெருமாளாகும்.

18) அமரருளும் ஆரிருளும் குறள் 121 பற்றிய புதிய சிந்தனை விளக்கம்.

19) தெய்வந் தொழாள்? குறள் 55 பற்றிய புதிய சிந்தனை விளக்கம்.

புவியியல் கட்டுரைகள்

மதுரைக்கு வந்த சுனாமி !

கடல்கோளால் உண்டானது நாகமலை !

கீழடி அழிந்தது சுனாமியினாலா?

விருப்பாச்சிப் பாறைகள் கடல்கோளால் உருவானவையா?

அழகர்மலையில் உள்ளது கல்மரமா?

சிவகளை மலைத்தொடர் கடல்கோளால் உருவானதா?

எழுகடல்தெரு வரை கடல்ஏழும் பொங்கி வந்துள்ளனவா?

கொடைக்கானல் மலைமேல் உள்ள பொக்குப் பாறைகள் சுனாமியினால் உருவானவையா?

மொரிசியசு தீவு பண்டைய கடல்கொண்ட மதுரையா?

டிகோகார்சிகா தீவு பண்டைய தமிழரின் கபாடபுரமா?

கங்கன் என்ற விண்கோள் மோதியதால் இமயமலை உருவாகி உள்ளது !

கங்கன் என்ற விண்கோள் விழுந்ததால் கண்டப் பெயர்ச்சி உருவாகி உள்ளது !

கங்கை என்ற விண்ணீர் வியனுலகு !

கங்கை இறங்கிய இடமே தக்களமேகன் பாலைவனமாக மாறியுள்ளது !

கங்கை பூமியில் விழும் போது அதிலிருந்த மூலக்கூறுகள் எரிந்து விழுந்த இடங்கள் பாலைவனங்களாக உள்ளன !

முனைவர் கி.காளைராசன் அவர்களது பதிவுகளைக் கீழ்க்கண்ட இணைய வலைத்தளங்களில் காணலாம்.

இணையப் பதிப்புகள்

http://freetamilebooks.com/ebooks/kaalaiyar-koil-puranam-short-version/

https://thirukkural-kalairajan.blogspot.com/
https://theory-of-tsunamis-kalairajan.blogspot.com/
https://letters-kalairajan.blogspot.com/
https://books-kalairajan.blogspot.com/
https://publications-kalairajan.blogspot.com/
https://kalairajan26.blogspot.com/
https://kasi-pathayathrai-kalairajan.blogspot.com/
https://kaalaiyarkovil-kalairajan.blogspot.com/

https://thiruppuvanam-kalairajan.blogspot.com/
https://thiruvadanai-puranam-kalairajan.blogspot.com/
https://pulikkarai-iyanar-kalairajan.blogspot.com/
https://temples-kalairajan.blogspot.com/
https://soundcloud.com/kalairajan-krishnan/